தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

ஆண்டு சந்தா ரூ. 6

ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2	சென்னை 25—6—55 சனிக்கிழமை	இதழ் 2



கண்ணதாசன் எழுதும்

ராஜ தண்டனை

பக்கம் 6, 7

கே. சம்பத் தரும்

வாழ்வது எப்படியோ ?

உயிர்ச் சித்திரம்—தென்னரசு

இரண்டாம் ஆண்டு

Best copy available.

வாழ்வது எப்படியோ?

வளமாக வாழ வழியிருந்தும் வறுமை ஏன்? பொருளாதார சக்கரம் பலவீனப்பட்டதேன்? புள்ளி விபரத்தோடு விளக்குகிறார்.......

ஈ.வே.கி.சம்பத்

(2)

ஒரு நாட்டில் பொருள்கள், அதிகம் உற்பத்தியானால், அந்த நாட்டில் பொருள்களின் விலை குறைகிறது. அந்த நாட்டின் நாணயத்துக்கு (ரூபாய்க்கு) அதிகப் பொருள்கள் கிடைக்கின்றன. அதாவது அந்த நாட்டின் நாணயத்தின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது. எனவே, வெளிநாடுகளில இந்த நாட்டு நாணயத்தின் மதிப்பு உயருகிறது. ஆகவே, ஒரு அரசு வெறும் நாணயங்களை நிறைய அச்சடித்துக்கொள்வதினாலேயே பெரிய செல்வமிக்க நாடாகிவிட முடியாது. நாட்டின் வளத்துக்கும், பொருள்களின் உற்பத்திக்கு தக்கவாறுதான் நாணயங்களின் மதிப்பும் அமைகிறது.

ஆக, ஒரு நாடு செல்வம் மிக்க நாடாக விளங்க டன் கணக்கில் ரூபாய் நோட்டுகளை அச்சடித்துக்கொள்வது ஒருபோதும் பயனளிப்பதில்லை. உண்மையான செல்வம் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தில்தான் உள்ளது.

பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் எனனும்போது பொருள்கள் எனப் படுபவையாவை? அவை காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன. மனிதனைப் பொறுத்த அளவில்தான் அவை வேறுபடுகின்றன. மனிதனுடைய வாழ்வில் செம்மையைச் செய்ய நான்கைந்து நூற்றாண்டுகளுக்குமுன் தேவைப்பட்ட பொருள்கள் இன்றைய மனிதனின் வாழ்வில் செம்மையைச் செய்யப் போதுமானதாய் இல்லை.

உலகத்து உயிர்களெல்லாம்வாழ்வுக்காகவே அலைகின்றன, திரிகின்றன. ஆனால், வாழ்வுக்காக அலையும் மனிதனுக்கும், மற்ற உயிர்களுக்குமிடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது, மற்ற உயிர்களெல்லாம் மனிதனுக்கு விவரம் தெரிந்த நாட்களிலிருந்து,வாழ்வு எனபதற்கு ஒரே மாதிரியான அர்த்தத்தையும், அதைப் பெறுவதற்கு ஒரே மாதிரியான வழி வகைகளையுமே பின்பற்றிக்கொண்டிருக்கின்றன. ஆனால், மனிதன் வாழ்வுக்குள்ள அர்த்தங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டும், விரிவுபடுத்திக்கொண்டும், மாற்றங்களுக்கும், விரிவுக்கும் ஏற்றவாறு வாழ்வை அடைவதற்கான வழிகளையும், முறைகளையும் மாற்றியும் விரிவுபடுத்திக்கொண்டும்வந்திருக்கிறான், வருகிறான். வருவான்.

யானை, புலி, கரடி, சிங்கம், மான், மயில், கோழி ஆகிய அனைத்து உயிர்களும் மனிதனுக்கு விவரம் தெரிந்து, அந்த விவரங்களைக் குறித்து வைக்கத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை தமது வாழ்வை எவ்வித மாற்றமுமின்றி நடத்தி செல்வது கண்கூடு. குகையிலும் காடுகளிலும் வாழ்ந்த சிங்கமும், புலியும் இன்றும் குகைகளிலும் காடுகளிலும்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. நிர்வாணமாய்த் திரிந்துகொண்டிருந்த அவைகள் இன்னும் நிர்வாணமாய்தான் திரிந்துகொண்டிருக்கின்றன. மான்களையும், மாடுகளையும் அடித்துத் தின்றுகொண்டிருந்த அவைகள் இன்னும் மாடுகளையும், மான்களையும்தான் வேட்டையாடிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், குகைகளிலும் காடுகளிலும வாழ்ந்துகொண்டிருந்த மனிதன் இன்று வீடுகள் மாடமாளிகைகள் கூடகோபுரங்களைக் கட்டிக்கொண்டு நகரங்கள், கிராமங்கள் என்று அமைத்துக்கொண்டு வாழுகிறான். ஆடைகள் அணிந்துகொள்ளத் தெரியாமல் நிர்வாணமாகத் திரிந்துகொண்டிருந்த மனிதன் இன்று இன்னின்ன காலத்திற்கு இன்னின்ன ஆடைகள் என்றுவகை வகையாக ஆடைகளணிந்து வாழ்கிறான். வேற்று விலங்குகளுக்கும் இயற்கையின் விபரீதங்களுக்கும் பயந்துகொண்டு, பாதுகாப்பற்ற நிலையில் அன்றைய மனிதன் வாழ்ந்திருந்தான். இன்று உலகத்தில் உள்ள மற்ற எல்லா உயிர்களும் மனிதனுக் கஞ்சிப்பணிந் அவனது இஷ்டத்தின் பேரிலேயே உயிர்வாழ முடிகிறது.

வாழ்வுக்கு மனிதன் அவ்வப்போது கொள்ளுகின்ற அர்த்தங்களுக்குத் தக்கவாறு அவனது தேவைகளும் வளர்ந்துகொண்டே போகின்றன. இந்தத் தேவைகள் பூர்த்தியானால் வாழ்வு இன்பமாய் இருக்கிறது. தேவைகள் பூர்த்தியாகாவிட்டால் வாழ்வே துன்பம் என்று வேதனைப்படுகிறான். தேவைகளில், அடிப்படைத்தேவைகளாகத் திகழ்வன உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகும். இவைகளுக்காவது வரையறுக்கப்பட்ட அர்த்தம் உண்டா எனில், இல்லை. உணவு என்றால் எந்த மாதிரியான உணவு, உடைஎனில் எம்மாதிரியான உடை, இருக்க இடம் எனில் எம்மாதிரியான இடம் என்பது அவ்வப்போது விவாதத்துக்குரியதாகவும் அவ்வப்போது அதிகாரத்திலிருக்கின்றவர்கள் முடிவு செய்வதாகவும் அமைந்துவிடுகின்றன.

எனவேதான் ஒவ்வொரு இன மக்களும் அதிகாரத்திலிருக்கின்றவர்கள் 'தம்மவர்களாய்' இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். வேற்றவர்கள் அதிகாரத்திலிருந்தால் நமக்குத் தேவையானவை எவை என்பதில் கவனம் செலுத்துவதைவிட, நம்மிடமிருந்து எவையெவைகளைப் பறித்துத் தங்கள் இனத்தை வாழ்விக்கலாம் என்பதிலேயே அதிகம் கவனம்செலுத்துவார்கள்.

வாழ்க்கைத் தேவைகள் பற்றிய விவரங்கள், அவைகளை அடைவதற்கான வழிகள், முறைகள், பற்றிய சிந்தனைகள், விவாதங்கள், முடிவுகள் ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையாக அமைகின்றன.

பொருளாதாரத்துறையில் (1) நாட்டுமக்களின் உண்மை நிலையைக் காண்பதும், (2) நடைமுறையில் நியாயமான தேவைகளை உணரவும், (3) அந்தத் தேவைகளை நிறைவேற்ற மனப்பூர்வமாக முயலுவதும், (4) இந்த முயற்சியின் வெற்றிக்காகவே தன்னிடம் உள்ள ஆற்றல் அதிகாரம் முழுமையையும் பயன்படுத்துவதும் தான் ஒரு நல்ல, சொந்த ஆட்சிக்குரிய லட்சணமாகும்.

எனவே, எந்நாட்டு மக்களும் தமது நாட்டின் ஆட்சி சொந்த ஆட்சிதானா, சொந்த ஆட்சியாயிருந்தாலும் நல்ல ஆட்சிதானா என்பதை மேற்கண்ட ஆட்சி முறையில் அமைக்கப்பட்டுச் செயல்படுகிறதா இல்லையா என்று கண்டறிவதன் மூலம் உணர்ந்து கொள்ளுதலே முறையாகும்.

இன்று உலகில் உள்ள நாடுகளில் சுதந்திர நாடுகளும் உள்ளன, அன்னியர் ஆதிக்கத்துக்குட்பட்ட அடிமை நாடுகளும் உள்ளன. வளம் கொழிக்கும் நாடுகளும் உள்ளன. வறுமையில் உழலும் நாடுகளும் உள்ளன. ஆனால், ஒருபுறம் சுதந்திரத்திற்கும் சுக வாழ்வுக்கும் மற்றொருபுறம் அடிமை வாழ்வுக்கும் வறுமைக்கும் நீங்காத தொடர்புகள் இருப்பதையே நிலைமைகள் விளக்குகின்றன. சுதந்திரநாடுகளனைத்தும் அடிமை நாடுகளைவிட சுபிட்சமாயும், பயமின்றியும் இருப்பதைக் காணுகிறோம். ஐரோப்பிய நாடுகளனைத்தும், அமெரிக்காவும், கானடாவும், ஆஸ்திரேலியாவும். நியூசிலாந்தும் வாழ்வில் வளம் கொழித்துக்கொண்டிருப்பதையும் விடுதலை வாழ்வைப் பெற்றிருப்பதையும் காணுகிறோம். விடுதலையடைந்த சீனாவும், இலங்கையும், இந்தோனேஷியாவும், பர்மாவும் சுபிட்சத்தை நோக்கி நிச்சயமான முன்னேற்றத்தைஅடைந்துகொண்டிருப்பதையும் காணுகிறோம். சுபிட்சத்திற்கான அறிகுறிகள் தென்படத் தென்பட உலக அரங்கில் அவைகளின் அந்தஸ்தும் மதிப்பும் உயர்ந்து வருவதையும் காணுகிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் நிலையோ மிகவும் விசித்திரமானது என்பதைவிட, மிகவும் ஆபாசமானது என்பதே பொருந்து[ம்] ஏனெனில், விடுதலை கிடை[த்து] ஆண்டுகள் எட்டு ஆகின்றன என[்] பெயர். ஆனால், உண்மைய[ான] விடுதலையோடு கூடிய வ[ள]ம் இந்தியத் துணைக்கண்டத்து மக்[கள்] எல்லோருக்கும் கிடைக்கவில்[லை.] கிடைப்பதற்கான அறிகுறிகளு[ம்] தென்படவில்லை. ஆனால், இந்தி[யத்] துணைக்கண்டத்தில் வடக்கே உ[ள்ள] பம்பாய் மத்தியப் பிரதேசம், உ[த்] தரப்பிரதேசம், மத்தியபாரத், ப[ஞ்]சாப், வங்காளம், பீஹார், ஒரிஸ்[ஸா] முதலிய பகுதிகளில் வாழு[ம்] மக்களுக்கு சுகவாழ்வுக்கான அ[டிப்] படைகள் துரிதமாக அமைக்[கப்] பட்டுள்ளன. அமைக்கப்பட்டு வ[ரு] கின்றன. தெற்கே ஐதராபா[த்,] ஆந்திரம், மைசூர், சென்[னை,] திரு-கொச்சி ஆகிய பகுதிகள் 'வி[டு] தலை'க்கு முன்பிருந்த வாழ்வினு[ம்] கேவலமான வாழ்வையே பெ[ற்] றிருக்கின்றன. இருந்துவந்த வ[ரு] வாய் வழிகளும் சுருங்கிக்கொண்[டு] வருவதைத் தவிர வாழ்வு நடத்[து] வதற்கான புதிய வருவாய்வழிக[ளோ] தொழில்கள் கிடைக்கவில்லை[.] ஆட்சிப்பீடத்தைக் காணுகிறோம்[.] அங்கு வடநாடே அதிகாரம் செலு[த்] திக்கொண்டிருப்பதைக் காணு[] கிறோம். உண்மையான விடுதலை[] யின் தர்க்கரீதியான அடுத்த கட்ட[] மிருக்கிறதே சுபிட்சம், அதை அவ[ர்] கள் அனுபவித்துக்கொண்டிப்பதை[] யும், அடிமை வாழ்வின் அடையாள[] மான துயரத்தில் திராவிடர்கள் உழன்று கொண்டிருப்பதையும் யாரே மறுக்கமுடியும்?

திராவிடத்தின் இன்றைய[ப்] பொருளாதார நிலை என்ன? திரா[] விடர்களின் தேவைகள் எவை? அந்த நியாயமான தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றனவா, அல்லவா? இம்மூன்று கேள்விகளுக்கும் கிடைக்கும் விடைகளைப் பொறுத்துத்தான திராவிடர்களின் அரசியல் அபிலாஷைகள் அமை[கின்]றன.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் பொருளாதாரக் கேந்திரங்கள் எனப்படுபவை பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பனிகள், தொழில் நிலையங்கள், பொதுவாணிபம், சுரங்கத் தொழில்கள், மின்சார உற்பத்தி ஆகியவைகளேயாகும். இவைகளில் முதலில் பாங்கிகளைப் பற்றி ஆராய்வோம்.

-தொடர் கட்டுரை

ஓவர்ஸீயர் கோர்ஸ்

S. S. L. C. தேறிய அல்லது தேருதவர்கள் படிக்கலாம். சர்க்கார் பரீட்சையில் தேறியவர்கள் ஓவர்ஸீயர் or டிராப்ட்ஸ்மென் வேலை பெறலாம். வேலை வாங்கித்தரஉத்திரவாதமளிக்கிறோம். ஹாஸ்டல் உண்டு. விபரங்கட்கு ஒன்பது ஒரு அணு ஸ்டாம்புகள் "பிரின்ஸிபால் (N.K.R. மூர்த்தி, B.Sc. Engg) காலேஜ் ஆப் இஞ்ஜினியரிங், தினமணி டாக்கீஸ் சமீபம், மதுரை," விலாசத்திற்கு அனுப்பவும்.

எண்ணம்

கண்ணதாசன்

சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழகத்தார் எனப்படுவோர் வெளியிடும்கலைக்களஞ்சியத்தின் இரண்டு பிரிவுகள் வெளியாகியிருப்பதை நண்பர்கள் அறிவார்கள் இந்த இரண்டு பிரிவுகளையும் வாங்குகிற ஒவ்வொருவனும் அவற்றைக் கண்ணேபோற் கருதிக்காக்கத்தான் ஆசைப்படுவான். காரணம், அவை எல்லாக் காலங்களிலும் உதவக்கூடிய 'ரெபரன்ஸ்' நூற்கள் என்னும் எண்ணத்தை அவை ஊட்டுவதுதான். இரண்டு பிரிவுகளையும் பிரித்து மேலோட்டமாகப் யார்க்கும்போது பிரமாதமான தயாரிப்புகளாகத் தோன்றும். ஆனுல், தயாரிக்கப்பட்ட-சேகரிக்கப்பட்ட செய்திகளில் பல எவ்வளவு தப்பும் தவறுமாகக் காணப்படுகின்றன. என்பதற்கு, இலங்கையைப் பற்றிய குறிப்பே உதாரணமாகும். தப்பு மட்டுமல்ல-குறிப்பு, பல விபரங்களை விட்டுவிட்டே கூடப் போய்விட்ட'து.' அதோடு எழுத்துப் பிழை வேறு கொலை புரிகிறது. இந்த விபரங்களை இலங்கையைச் சேர்ந்த 'சுதந்திரன்' பத்திரிகை விளக்கமாகக் கூறியிருக்கிறது. "பெரிய மூளைகள்" எனக் கருதப் படுகிறவர்கள் சேர்ந்து இவ்வளவு தவறுகள் புரிவார்களானுல், பயில்கிற மாணவர்கள் என்ன கதி ஆவது! இலங்கையைப் பற்றிய குறிப்பு எவ்வளவு தவருனது என்பதை, இலங்கை சுதந்திரன் வெளியிட்டதை கீழே தருகிருேம். படித்துப் பார்த்து தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் திருத்த முயல்வார்களாக!

அது இது:

"கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதியில் அ முதல் இ யின் இடைப் பகுதிவரை இடம்பெற்றிருந்தது. இரண்டாவதுதொகுதி இ யின் விடுபட்ட இடத்தில் ஆரம்பித்து ஃவரை கொண்டதாயிருக்கிறது.

இரண்டாவது தொகுதி கையில் கிடைத்ததும், நாம் இலங்கையர் என்ற முறையில், இலங்கையைப் பற்றி என்ன. சொல்லப்பட்டிருக்கிறது, என்பதைத்தான் முதன் முதலில் புரட்டிப் பார்த்தோம். இலங்கையிலுள்ள தமிழர் எவரும் நாம் செய்த காரியத்தைத்தான் முதலில் செய்வார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

இலங்கையைப்பற்றி சுமார் ஐந்து பக்கங்கள் எழுதப்பட்டிருக்கிறது. மூன்றுபேர் இந்த ஐந்து பக்கத்தை எழுதியிருக்கிருர்கள். இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பூகோளப் பேராசிரியர் டாக்டர் கா. குலரத்தினம் இலங்கையின் பூகோள அமைப்புப்பற்றியும் ஜனத்தொகை, விவசாயம், கனிப்பொருள்கள், கைத்தொழில்கள், போக்குவரத்து, வாணிபம், கல்வி முதலியன பற்றியும் எழுதியிருக்கிருர்.

இலங்கையின் வரலாற்றைப் பற்றி சென்னை பச்சையப்பன் கல்லூரி, வரலாற்றுப் பேராசிரியர், திரு டி. கே. வெங்கடராமன் எழுதியிருக்கிருர்.

இலங்கையின் அரசியல்அமைப்பு, நீதி, சிற்ப சித்திரக் கலைகள், கல்வெட்டுகள், தொல்பொருள்கள், இவை பற்றி இலங்கை தொல்பொருளியல் கமிஷனர் திரு எஸ். பரனவிதான எழுதியிருக்கிருர்.

ஆனுல் இவ்வளவையும் படித்த பின்பு தமிழர் என்ற வகையில் நாம் அடைந்தது ஏமாற்றம், பெரிய ஏமாற்றம், மிகப் பெரிய ஏமாற்றந்தான்! தமிழில் ஒரு நூல் என்ருல் அது பெரும்பாலும் யாருக்காக எழுதப்படுகிறது? ஆங்கிலேயருக்காகவோ, ஜெர்மனியர்களுக்காகவோ, அல்லது சிங்களவர்களுக்காகவோ அல்ல. அது பிரதானமாக தமிழ் மக்களுக்காகவேதான் எழுதப்பட வேண்டும். அப்படி எழுதப்படும் தமிழ் நூல் ஒரு 'ரெபரன்ஸ்' நூலாகவுமிருப்பதாலுல் அது தமிழையும் தமிழரையும் பற்றியாவது, முற்ருன முடிவான விவரங்களைக்கொண்டதாக அமையவேண்டாமா? தமிழ்மக்கள் பிறரையும் பிற விஷயங்களையும் பற்றி அறிவதத்குமுன் தங்களைத் தாங்களே அறிந்துகொள்ளவேண்டாமா? தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிருர்கள். அவர்கள் என்ன நிலையில், என்ன அந்தஸ்தில் வாழ்கிருர்கள்? அவர்கள் வாழும் இடங்களில் எல்லாம்அவர்களுடைய பூர்வீகம் என்ன? அரசியல் சமாச்சாரம் என்ன? சரித்திரப் பின்னணி என்ன? கலை, கலாச்சார அபிவிருத்திகள் என்ன? என்பனவற்றைத் தமிழர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?

இந்தியாவிலே, அதுவும் தமிழ் நாட்டிலே, இன்னும் எத்தனையோ படித்தவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் சிலோன் என்பது யாழ்ப்பாணத்திலே ஒரு பட்டணம் என்று எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். இலங்கை நாட்டில் தமிழர்கள் சீரும் சிறப்புமாக வாழ்கிருர்கள்: சரித்திரம் அறியாக் காலந்தொட்டே அவர்கள் வாழ்ந்து வருகிருர்கள் என்பதை அறியமாட்டார்கள்: ஏதோ சில தமிழர்கள் தேயிலைக் காட்டில் கூலி வேலை செய்கிருர்கள் என்று எண்ணி வருகிருர்கள். அவர்களுக்கெல்லாம் இலங்கை என்ற தலைப்பின்கீழ் இங்கு வாழும் தமிழ் மக்களின் பெருமையும், சிறுமையும், உண்மையும், உயர்வும் தெரிய வேண்டாமா? இலங்கையின் ஒரு நல்ல தேசப்படமாவது இந்தப் பகுதியில் இடம்பெற வேண்டாமா?

இலங்கையின் ஒரு சின்னஞ்சிறிய தேசப் படத்தை விஷயமறியாத ஒருவரைக்கொண்டு வரைந்து வெளியிட்டிருக்கிருர்கள். அதில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாதோட்டத்தை யடுத்த மன்ஞர் தீவைக் காணவில்லை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்டு பிரதான தீவுகளையும் காணவில்லை. தமிழ்மக்கள் வாழும்யாழ்ப்பாணத்தின் பெயரைக் காணவில்லை. தேவாரப் புகழ்பெற்ற திருகோணமலை குறிப்பிடப்படவில்லை: விபுலானந்தரை ஈன்ற மட்டக்களப்பும் விளக்கப்படவில்லை. இவைதான் போகட்டும்; அருவி ஆறும், கால ஓயாவும், களனிகங்கையும், ஜின் கங்கையும், மாணிக்கக் கங்கையும் கிழித்துவிட்டிருக்கும் இவர்களுக்கு பிரதானமான மஹாவலி கங்கையை வரைந்துவிடத் தெரியவில்லையே!

இலங்கையின் வரலாற்றைப்பற்றி இலங்கையர் ஒருவரைக்கொண்டு எழுதிவித்திருக்கலாம். டாக்டர் கணபதிப் பிள்ளை, டாக்டர் வித்தியானந்தன், தனிநாயக அடிகள் இவர்களில் யாரையாவது கேட்டிருந்தால் அவர்கள் மறுத்திருக்க மாட்டார்கள். சென்னை ஆசிரியர் ஒருவர் எழுதியிருக்கிருர். இலங்கைச் சரித்திரத்தில் காணுத பல விவரங்கள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. இலங்கையில் தமிழர் சரித்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுபடவில்லை. யாழ்ப்பாணம், தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட செய்தி இடம்பெறவில்லை. சங்கிலியனின் பெயர் தானும் குறிப்பிடப்படவில்லை; சென்னைப் பேராசிரியர் துட்டகமுனுவைப்பற்றி கூறுகிருர். ஆனுல் எலலாளனைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

திரு பரனவிதான, இலங்கையின் அரசியல் பற்றி சொல்ல வந்தவிடத்து ஐக்கிய தேசியக் கட்சியை மட்டும் குறிப்பிடுகிருர். கலைகலாச்சாரத்தைப் பற்றிக் கூறுகையில் எல்லாம் சிங்களமயமாகவே காணப்படுகின்றன.

"இப்போது இலங்கையிலுள்ள சிங்களவர்களுடைய மூதாதையர் வடஇந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஓர் ஆரியமொழி பேசும் மக்கள் கூட்டாமாவர். அவர்கள் குடியேறியது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னதாகும். அதுமுதல் இலங்கையின் வரலாறு தொடங்குகின்றது" என்று மட்டும் திரு பரனவிதான கூறுகின்ருரே யன்றி அதற்கு முன்பு இலங்கையில் யாரும் வாழவில்லையா அப்படி வாழ்ந்தவர்கள் தமிழர்கள் அல்லவா என்றபுதிரை விடுவிக்கவில்லை. கலையைப்பற்றி கூறுகையில் "இலங்கைக்குரிய கலையிலும் சிற்பத்திலும் காணப்படும் விஷயங்கள் ஆதியில் சிங்களவர்வடஇந்தியாவிலிருந்துகொண்டு வந்தவைகளும், அசோகர் காலத்தில் இலங்கைக்கு வந்து சிங்களவர்களைப் பௌத்தர்களாக்கிய பௌத்த மதப் பண்பாட்டினுல் ஏற்பட்டவைகளுமாகும்" என்று திரு பரனவிதான கூறுகிருர். வட இந்தியர் வந்து சிங்களவர் ஆனுர் என்பதுதான் கதை. விஜயனுக்குப் பின் சிங்களவருக்கு வடஇந்தியருக்குமிடையே பெரும் தொடர்பு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் "ஆதியில் சிங்களவர் வடஇந்தியாவிலிருந்து கொண்டு வந்தார்"களாம் கலையை. இது எப்படியென்பது புரியவில்லை!

இந்தக் கலைக்களஞ்சியத்திற்கு இலங்கை பற்றிய குறிப்புகள் ஆங்கிலத்தில் எழுதித் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. மொழிபெயர்ப்பைத் தானும் இலங்கையிலுள்ள ஒரு தமிழரைக் கொண்டு சரிபார்த்ததாகத் தெரியவில்லை. "இலங்கை மக்களில் 45 இலட்சம் பேர் கரவர்" என்று ஒரு இடத்தில் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் கரையார் என்பதை **Karawas** என்று சொல்வதுண்டு. எனவே, கரையாரைக் கரவர் ஆக்கிவிட்டார்விஷயமறியாத மொழிபெயர்ப்பாளர். **Dondra Head** என்பதை நாம் தேவந்துறை என்று சொல்லி வருகிருேம். இது தீவாந்தரம் ஆகிவிட்டது. **Satin Wood** என்பதை: இலங்கையில் முதிரை மரம் என்று அழைக்கிருர்கள், இது கரும் புரசு என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய வழக்கு இப்படியோ தெரியவில்லை. ஹல்மில்லா என்றும் நாதுன் என்றும் இலங்கையில் மரங்கள் உண்டாம். இவற்றிற்கு அருமையான தமிழ் வார்த்தைகள் இலங்கையில் வழக்கிலுண்டு. ஹல்மில்லா என்ருல் சமலை அல்லது சமண்டலை மரம். நாதுன் என்பதைக் கல் ஒதியென்கிருர்கள். இன்ெனுரு மொழிபெயர்ப்பைப் பாருங்கள். "டச்சுக்காரரிடமிருந்து தோன்றிய மக்கள் பர்கர் என்றழைக்கப்படுவர்" **Burger** என்ற சொல்லுக்கு பறங்கியர் என்ற அழகான தமிழ்ப் பதம் இருக்கிறதே!

எழுத்துப்பிழைகளுக்குக்குறைவேயில்லை. ஒரு இடத்தில் யாழ்ப்பாணம் ஏதோ ஒருவகைப் பானம் ஆகியிருக்கிறது. **Delfet** (நெடுந்தீவு) **Keyts** (ஊர்காவற்றுறை) என்ற ஆங்கில எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன. உத்தரவு — உத்திரவு ஆகிவிட்டது; இந்த ஒரு பகுதியிலேயே இத்தனை எழுத்துப் பிழைகள் என்ருல் ஏனைய பகுதிகளைப் பார்க்கவே வேண்டாம்.

கலைக்களஞ்சியம் போன்ற ஒரு மதிப்புமிக்க வெளியீடு கூடுமானவரை பிழைகளும், தவறுகளும் இல்லாதவாறு பிரசுரிக்கப்பட வேண்டும். பிழைகளோடும் தவறுகளோடும் பிரசுரிப்பதாலுல் இந்த நூற்ெருகுதிக்கு என்ன மதிப்பு இருக்கமுடியும்? அண்டை நாடான இலங்கையைப் பற்றியே இத்தனை அலங்கோலங்கள் என்ருல் தூர தேசங்களையும், கலை நுணுக்கங்களையும் பற்றி இந்நூல் தரும் விவரங்களில் தமிழ் மக்கள் எப்படி நம்பிக்கை வைப்பது என்று கேட்க ஆசைப்படுகிருேம்."

◉

வெண்பாப் போட்டி 11

இரட்டைப்புலவர் முறை:

செந்தமிழா இன்பத் திராவிடா தென்னகத்தில்
இத்திவரு மானுல்நீ என்செய்வாய்?

முடிவு தேதி 9-7-55.

தென்றலே யேன்வந்தாய் செப்பு

முடிவு அடுத்த இதழில்.

கேடு நினைப்போர்க்கு மலைப் பாம்பு !

நான் நினைக்கிறேன்

தோகை மயிலே, உன்னுடைய கடிதம் கிடைக்கப்பெற்றேன். வழக்கம்போல் சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறாய்; விந்தையுறவில்லை. காரணம், எனது சிந்தையெல்லாம் கேள்விக்குறிகள் தாக்கித் தாக்கி இறுகிப்போனதென்பதை நீ அறிவாய். நான் சார்ந்திருக்கும கொள்கைகளை, அவைகளைக் கொண்ட லட்சிய மாளிகையை ஏளனம் செய்தோரெல்லாம் இன்று தேடிவந்து கௌரவம் தருவதும் உனக்குத் தெரியும். உன்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறேன், காலத்திற்கு இரட்டை முகம் உண்டு; கொடுமைக்காரனுக்கு தின்னவரும் புலியாகவும்; கொள்கை வீரனுக்கு கொஞ்சும் புறாவாகவும் தோற்றமளிக்குமென்று. நீ அதை அப்போதெல்லாம் நம்பியிருக்கமாட்டாய். காலத்தின் மகிமையை காலத்தாலேயே அறிந்து கொண்டிருப்பாய். அன்பு மயிலே, உன்னைப்போன்றவர்கள் எங்களைத் தவறாகப்புரிந்து கொள்வது குறித்து நாங்கள் வருத்தப்படுவதே இல்லை. எங்களைப்பற்றி உங்கள் போன்றோரிடம் சிலர் தவறாகச் சொல்லி வைத்திருப்பதுதான் அதற்குக் காரணம் என்பதை நாங்கள் அறிவோம். கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும் பட்டுப்பூச்சியை பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தால் பயங்கரமாகத் தானிருக்கிறது. அதிகார பலம்பெற்ற சில 'பேசும் பூதக் கண்ணாடி'களின் கைங்கர்யம் தான் வீட்டுக்குள்ளே பூவேலை செய்து கொண்டிருக்கும பெண்டிர்களின் கருத்துக்குக் கூட நாங்கள் பயங்கரவாதிகளாகத் தோற்றமளிப்பது. இதில் ஒரு விந்தை! எந்தப் பெண்ணினத்தின் விடுதலைக்காக நாங்கள் புதுமைக்கருத்துக்களை நாட்டிலே பரப்பி வருகிறோமோ, அதே பெண்ணினம்தான் எங்களை எளிதிலே நம்ப மறுத்து விடுகிறது. இலலையா? மயிலே, உன்னைப் பொருத்த வரையிலே எடுத்துக்கொள். "விதவா விவாகம் செய்து கொள்; வீணிலே இளமையை அழித்து விடாதே" என்று எத்தனை மாதங்களாகச் சொல்லி வந்தேன் இரண்டாண்டு காலம் வரை என்னுடைய பேச்சை நம்பவே இல்லையே! , ஜாதி ஆசாரம் செத்துவிடும் என்றல்லவா சொன்னாய்! உற்றார் உறவினர் பகை வநதுவிடும என்றல்லவா பயந்தாய். என்ன ஆயிற்று இப்போது. வசதிமிக்கோர் சீர்திருத்தமுறைப்படி நடக்கத் தலைப்பட்டால் நிச்சயம் தமிழகம் முன்னேறிவிடும் என்பது என்னுடைய அசைக்கமுடியாத எண்ணம். இதே சீர்திருத்தத்தை-விதவாவிவாகத்தை ஏழை வீட்டிலே செய்திருந்தால் அந்தக் குடும்பம் ஊரிலே நிம்மதியாக வாழ்ந்திருக்கமுடியுமென்று கருதுகிறாய். அதனால்தான், ஏழைஉள்ளத்திலே அரும்புவிடும் இலட்சிய வேட்கை வலுவுள்ளதாக அமைந்துவிடுகிறது.

தோகை மயிலே, நேற்றைய கடிதத்தில் நீ கேட்டிருக்கும் சந்தேகம் எங்களுக்குப் புதிதல்ல. சலித்துப் போனவை. பத்திரிகையிலே வெளியான ஒரு செய்தியை வைத்துக் கொண்டு சந்தேகம் கேட்பது போலக்கேட்டு எங்களைத் தோல்வியுறச் செய்ய முனைந்திருக்கிறாய். விதவைத் திருமணத்தை நீ எளிதிலா ஒப்புக் கொண்டாய்? வாழ்வு மாயமல்ல, வையகம் அநித்யமல்ல என்பதை ஒப்புக் கொள்ள எத்தனை ஆண்டுகள் பிடித்தன? அதைப்போலத்தான் நீ இப்போது எழுப்பியிருக்கும் பிரச்சினையும். பேய் பிடித்தல்! இது பற்றி இப்போது உனக்கு பலத்த சந்தேகம் முளைத்திருக்கிறது. பெண்ணொருத்திக்குப் பேய் பிடித்து அதன் பயனாய் கோபம் கொண்ட பெண்ணின் தகப்பனார் கோயில்விக்ரகத்தை உடைத்து நொறுக்கியதாக சென்ற கிழமை செய்தித்தாள் ஒன்றில் வெளியான செய்தியொன்றை முன்வைத்து சந்தேகத்தை விளக்கச் சொல்லியிருக்கிறாய். சந்தேகத்தை சான்று காட்டிக் கேட்டிருக்கிறாய்; மகிழ்கிறேன். அன்புள்ளவளே, உன்னை யொரு கேள்விகேட்கிறேன்; டைபாயிடு ஜுரம் எல்லா ஜாதியாருக்கும் வருகிறது; நிமோனியா காய்ச்சலும் அப்படித்தான். வைசூரிக்கும் ஜாதிபேதம் கிடையாது. ஆனால் இந்தப்பேய் மட்டும் ஏன் ஜாதிமதம் வித்தியாசம் பாராட்ட வேண்டும்? எந்தப் பார்ப்பனப் பெண்ணுக்காவது பேய் பிடித்ததாகக் கேள்வி பட்டதுண்டா? எந்தத் தாசிக்காவது பேய் பிடித்திருக்கிறதா? அல்லது எந்த இஸ்லாம், கிறிஸ்து, பெண்களுக்கும் பேய் பிடித்திருப்பதாக நீ அறிந்திருக்கிறாயா? பேய் அவர்களை ஏன் நெருங்குவதில்லை? 'வெள்ளச்சாமி பிடித்திருந்தது; உடுக்கடித்து விரட்டியடித்தார்கள்; பூசாரிக்கு புனுகு, ஜவ்வாது வாங்கிக்கொடுத்தார்கள்' என்று கேள்விப்படுகிற செய்திகளிலெல்லாம் பேய் பிடிக்கப்பட்டவள் தமிழ்ப் பெண்ணாகத்தானே இருக்கிறாள்! சலிமாபேகம்களுக்கோ சர்மா சாஸ்திரி புத்திரிகளுக்கோ இல்லையே! தோகை மயிலே, பலநூல் கற்ற அறிவுசார்ந்த பெரியார்கள் சொன்னதைக் கேட்டிருந்து சொல்லுகிறேன்; அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் நூற்றுக்கு நூறு உண்மைஎன்பதை பல நிகழ்ச்சிகளை நேரிலே கண்ட பின்பு முடிவு கட்டிச்சொல்லுகிறேன். அதிகமாகச் சாப்பிட்டுவிட்டால் படுக்கையில் சாய்ந்து விடுகிறோம். அது உண்டமயக்கம்; சக்தி மீறி உழைத்து விட்டால் சுருண்டு விடுகிறோம்; அது களைப்பு; அதுபோலத் தான், தன் சக்திக்குமீறிய இயற்கை உணர்ச்சியை தேக்கி வைப்பதால் ஏற்படுகிற 'மதம்'தான் பேய்! மதம் பிடித்த அந்தப் பேய் தமிழ்ப்பெண்களைத்தான் பிடிக்குமா? இல்லை. எல்லா மதத்தினரையும் பிடிக்கும்; பொருந்தாத கணவனைப்பெற்றிருக்கிற இளம் பெண்கள்; ஒழுக்கம் தவற அஞ்சி இயற்கை உணர்ச்சி எழுப்பும் இதய வேதனைக்கு ஆளாக்கப்படும் இளம் விதவைகள் எந்த ஜாதியில் இருந்தாலும் அவர்களை இந்தப் பேய் பிடிக்கத்தான் செய்யும்-தாசியைத்தவிர! தாசிக்கு வேட்கை வளர வாய்ப்பில்லை அல்லவா அதனால்! எல்லா மதத்தினருக்கும் இந்தப் பேய் பிடிக்குமென்றால் அவையெல்லாம் அம்பலமேறுவதில்லையே காரணமென்னவென்று கேட்கலாம்! சர்மா, சாஸ்திரிகளின் பெண்களுக்கு மதம் பிடித்தால் அதற்கு பேயென்று சொல்லமாட்டார்கள் - "பூசாரியைக் கூட்டிவா, புங்க மரத்தடியிலே உடுக்கடித்து விரட்டுவோம்" என்று சொல்ல மாட்டார்கள். அதுபோலத்தான், வேற்றுமதக்காரர்களும். மூவேந்தர் காலத்திலேயே இந்த உண்மை வெளியாகியிருக்கிறது என்பதற்கு ஒரு சான்று தருகிறேன் படி. குடும்பத்தின் தலைமகள், பூச்சூடாமல், நெற்றிக்குத் திலகமிடாமல் கண்ணீர் வடித்து புலம்பிச்சாகிறாள். கண்ணற்ற பெற்றோர் மகளுக்கு பேய் பிடித்திருக்கிறதெனக் கருதி பூசாரியை கொணர்ந்து பேயோட்ட முயற்சித்தார்கள். மகமாயியின் குறை என்கிறான் அந்த மாபாதகன். உடுக்கொகாதைத் துளைக்கிறது. அதற்குமேல் அந்த இதயமற்ற பூசாரியின் எருமைக்குரல். ஏந்திழை அந்த இடத்தில் இருக்க முடியாமல் ஓடுகிறாள். ஓடும்போது தன் தோழிகுக் கேட்கும்படி "தோழிப் பெண்ணே, என் நெஞ்சு புகுந்துள்ள நோய்தீர்க்க வல்லான் என்னைக் கவர்ந்த சேர மன்னன்தான்; அதுவரை எத்தனை பூசாரி எத்தனை உடுக்குகள் அடித்தாலும் முடியாது! முடியவே முடியாது. இதைச் சொல்வாயா என் பெற்றோர்களிடம்" கூவி விட்டுப் போனாளாம். இதோ அந்தப் பாட்டு கேள் :-

காராட் டுதி ரந்தூஉ யன்னை
களனியழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ-
பேராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சின
வேற் கோதைக்கென்
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

தோகை மயிலே, இந்த சிறு விளக்கத்தில் உன்னுடைய புதிருக்கு விடை கிடைத்திருக்கக் கூடும். உதாரணங்கள் வேண்டுமானால் உன்னைச்சுற்றியுள்ள ஒருசிலரை நினைவுக்கு இழுத்து வந்து பார் - தென்படுவார்கள் - காலமும்சொல்லமாலபோகாது. ஏனென்றால் உனக்கு தொட்டுத் தொட்டு சொல்லியிருக்கிறேன், கேடு நினைப்போருக்கு காலம் மலைப்பாம்பு; நல்லவை சொல்லி நாட்டை அறியாமைப் பிடியிலிருந்து நீக்க முயலுவோருக்கு அது ஒரு மலர் மாலை என்று. அதை நீ விரைவில் உணர்வாய். வருகிறேன்.

'சவுத் கிங்'

நாடு மீட்போர்க்கு மலர் மாலை !



உயிர்ச் சித்திரம்

எஸ். எஸ். தென்னரசு

இயற்கை மணம்பெற்ற தென்னாட்டுச் சந்தனமரங்களில் செதுக்கப்பட்ட சித்திரக்கூடம் அது - நாடாண்டு மாண்டுபோன வடவேந்தர் பலரது வைரமணிக்கிரீடங்கள் ஒருபக்கம் - கண்ணாடிப்பெட்டியை சின்னக் கடலெனக் கருதி, நீந்தி விளையாடும் மீன்குஞ்சுகள்கொண்ட வண்ணப்பெட்டிகள் அவை நெடுகமின்னிடும் சுருள் கத்திகளும், தன்னிடம் பாய்ந்துவரும் எதிரிகை வேலை தடுத்தொடிக்கும் கேடயங்களும், சுவரின் இருமருங்கும்-இதயத்தில் குடியேறிய இன்பவல்லிக்கு காதல் கோயில் எழுப்பிய மகமதிய சாம்ராஜ்யத்தின் மாவேந்தன் ஷாஜஹானின் கீர்த்தி சொல்லும் 'கல்வெட்டுக்கள்' தூண்களைச் சுற்றி-இலக்கிய மேதைகளும் இன்பக்காவியத்தின் சிருஷ்டிகர்த்தாக்களும் ராஜசபையின் கம்பீரத்திற்கு உயிர்கொடுக்க - ராஜாங்க கௌரவத்திற்கு மெருகு பூச, டில்லி சுல்தான் தனது மன்னர் குலத்திற்கே உரித்தான ராஜ பார்வையை இரண்டுமுறை சபையை நோக்கிச் சுழற்றிவிட்டு, வெம்கண் சிவந்து, வெடிவால் முறுக்கி நிற்கும், சிங்கமுகத்தோற்றமுடைய சிங்காதனத்தில் அமர்ந்திருந்தான்.

நடக்கவிருக்கும் தன் மகள் மர்ஜியானாவின் திருமணத்திற்கான ஏற்பாடுகளையே அவனுடைய உள்ளம் எந்த நேரமும் எண்ணிக்கொண்டிருந்தது. மகளின் மணவிழா தலைநகரத்தையே இன்பத்திலாழ்த்தப்போகிறது எனபதன் இன்பக்குறிகளும், இஸ்லாமியப பேரரசின மணிவிளக்கு இன்னொருவன் அரண்புகப் போகிறதே, டில்லி நகர் இருள் சூழ்ந்துவிடுமோ என்ற கவலையும் சுல்தான் முகத்தில் மாறி மாறி பிரதிபலித்தன. பிரபல ஓவியன்-அதுவரை ராஜசபை எதிர்பார்க்கப் பட்டவன், மன்னர்முன் அழைத்து வரப்பட்டான். அவன் அணிந்திருந்த ஆடையில், சிதறிக்கிடந்த பல வர்ணக்கறைகள் அவனை ஒரு ஓவியன் என்று சொல்லிக் காட்டியது. இளந்தாடி-தொழில் நுட்பம் படர்ந்த விழிகள். அவன் தலை தாழ்த்தி பணிபுரியக் காத்து நின்றான்.

பிரதம மந்திரி பேசினார்; "ஓவியரே, உமது ஓவியங்களை நாம் கண்டிருக்கிறோம். மன்னர் மகிழ்ந்திருக்கிறார். உமது சித்திரக்கலைக்கு நித்தில மகுடம் சூட்டும் வாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது."

ஓவியனின் விழிகள் விரிந்தன; களிப்பால், அவனுடைய காவி படிந்த பற்கள் இதழைப் பிளந்து தலைகாட்டின.

"ஓவியரே, மன்னர் மகள் மர்ஜியானாவுக்கு அடுத்த மாதம் திருமணம்."

"அறிவேன் அமைச்சரே."

"மகள் போய்விட்டால், மாளிகை இருண்டுவிடுமோ, என்ற மனக்கவலை மன்னரைப் பிடித்தாட்டுகிறது. அதை நீக்க, மர்ஜியானாவைப்போல ஒரு ஓவியம் வரைய முடியுமா?"

"எழுதித் தருகிறேன்; ஆனால், இளவரசியார் படம் முடியும்வரை என்னருகிலேயே இருக்க அனுமதிக்கவேண்டுமே." ஓவியர் சொன்னார்.

"என்ன! மர்ஜியானா உம்மருகில் இருக்கவேண்டுமா?"

"வேண்டாமா? பாவையைப் பார்த்துத்தானே படம் வரைய வேண்டும் பிரதமரே!"

"மணப்பெண்ணை-குணவதியை மற்றவர்கள்முன் உலவ விடுவது தான் உன்நாட்டுப் பண்போ?"

"இந்த ஏழை ஓவியனைப்பற்றி மட்டும் பேசுங்கள் - என்தாயகத்தைப்பற்றிப் பேசாதீர்கள் அமைச்சரே! வையகத்துத் தேசங்களில் வாழ்க்கைக்கே இலக்கணம் கண்ட தேசம் தென்தேசம்தான் பிரதமரே."

"போதும் பிரதாபம்! தென்னாட்டுக்கலைஞன் கைதேர்ந்தவன் என்ற எங்களது முடிவில் மண் தூவிவிட்டீர். கலைஞானம் அங்கே

பூஜ்யமோ? வடநாட்டு ஓவியர்கள் கூந்தலை வைத்தே படம் போட்டு விடுகிறார்களே ஓவியரே, தென்னாடு அதற்குக்கூடவா கேவலம்?"

"அமைச்சரே, திருவிடம் பற்றிக் கூறுதீர்கள்-உள்ளம் தீயாகிவிடும். வயிற்றுப் பிழைப்புக்காக நான் வடதேசம் வரவில்லை, வடவரின் கலை நோக்கை எடைபோட வந்தேன்; கூந்தல் கொண்டு சித்திரம் வரைய வடவர்கள் வல்லவர்களானால், திருவிடத்தான் பெண்ணின் சுண்டுவிரல் நகம் வைத்து, அந்தப் பதுமையை சிருஷ்டித்துவிடுவான்-மறந்துவிடாதீர்கள்! எங்கே மர்ஜியானாவின் சுண்டுவிரல் நகம்? இன்று தாருங்கள், நாளை ஓவியம் தருகிறேன்." - ஓவியன் கர்ஜித்தான்.

மன்னன் முகத்திலே ஜீவக்களை ஊற்றெடுத்தது. மந்திரி பெருமிதம் கொண்டார். ஓவியன் மர்ஜியானாவின் சுண்டுவிரல் நகம் பெற்று இல்லம் திரும்பினான்.

★

மீண்டும் அவை கூடியது. ஓவியன் தான் வரைந்த ஓவியத்தை ஒரு பட்டுத்துணியால் மூடி மன்னர்முன் வைத்தான். இடக்கரத்தில் ஓவியத்தை ஏந்தி, வலக்கரத்தால் பட்டுத்துணியை நீக்கினான். மாண்டவர் மீண்ட மகிழ்ச்சி அவர் அகத்திலே பொங்கி எழுந்து முகத்திலே வழிந்தோடியது. "ஓவியரே, நீர் தான் ஒப்பற்ற சித்திரக்கலைஞன்-உயிர்கொடுக்கும் சக்தி உம்மிடமிருந்தால் நீர்தான் உலகதேவன் கலைஞரே; நீர்தான் ஆண்டவன். ஓவியரே, எங்கே உம் திருக்கரம்; டில்லி மன்னனின் ராஜமுத்திரை (முத்தம்) பதிக்கிறேன்" என்று வாய்விட்டுப் புலம்பினான் மன்னன்.

"பாராட்டுதலுக்கு நன்றி மன்னவரே! நீங்கள் தந்த இந்தப் புகழ்மொழி என் தாயகத்திற்குத்தான் வேந்தே! ஒரு வேண்டுகோள் - நாளை நான் தாயகம் திரும்ப இருக்கிறேன். எனது ஓவியம் சரிதானா என்று என் மனம் ஒப்பவில்லை. அது குறித்து எந்து பணிவன்பான் வேண்டுகோள்; மன்னர்பிரான் கோபித்துக்கொள்ளமாட்டீர்களே, மர்ஜியானாவை ஒருமுறை பார்க்க அனுமதிக்கவேண்டும் வேந்தே! கேட்கக்கூடாத ஒன்றை-கலைவெறியால் கேட்கிறேன். கன்று கண்டு நடுங்கும் நான், கொன்றிடும் சக்தி பெற்ற கோலமுடி மன்னன்முன், இதயதாகத்தால் துணிந்துகேட்கிறேன், என் கலையின்மீது எனக்கு நம்பிக்கை பிறக்க, உம் மகளை எனக்குக் காட்டித்தான் ஆகவேண்டும் ராஜதிலகமே, மறுக்காதீர்கள், மாசற்ற என் கலைவேட்கையைக் கொன்றுவிடாதீர்கள். தங்களின் திருமகளைப் பார்த்துவிட்டுத்தான் இத்தலைநகரைவிட்டு அகலுவதென இந்தத் தமிழோவியன் முடிவு கட்டிவிட்டான்." கெஞ்சினான் ஓவியன்.

வேந்தன் வெகுண்டான்; "சித்திரக்காரா! ஓவியத்திற்கு விலை வேண்டுமா, பெற்றுப்போ; உழைப்புக்கு ஊதியமா? தருகிறேன். ஆனால், ராஜகுல பழக்க வழக்கங்களை மாற்றிட எண்ணாதே! உன் சித்திரக்கலைக்குக் கேடு - ஏன்? உன் சிரசிற்கே கேடு; போ! போய்விடு." என்று கடிந்துரைத்தான் டில்லி மன்னன்.

ஓவியன், பிரேதக்களை சொட்ட ராஜசபை விட்டகன்றான். டில்லி வேந்தன், அந்த ஏழை மறையும் வரை அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவன் மறைந்ததும், பக்கமிருந்த மர்ஜியானாவின் ஓவியத்தைப் பார்த்தான்.

★

பத்துநாட்களுக்குப்பின்....

வாடகைக்குடிசை. ஓவியனைத் தேடிப்போன சேவகர்கள் அங்கே ஓவியனைக் காணமல் அரண்மனை திரும்பினர். மன்னனுக்கு பெருங்கவலை, அந்த ஏழை ஓவியனின் ஆசை நிறைவேறாது போயிற்றே என்று. எங்கே போயிருப்பான் அந்த ஓவியன் என்று மன்னனும் மற்றவர்களும் சிந்தித்துக்கொண்டிருந்த நேரத்தில், இரண்டு காவலர்கள் ஒரு சாக்குமூட்டையைக் கொண்டுவந்து மன்னர்முன் போட்டார்கள். அதற்குள்ளிருந்து ஒரு கோரரூபத்தினன் எழுந்தான். கண்கள் பிடுங்கப்பட்டிருந்தன. பிடுங்கப்பட்ட அந்தக் கண்களை ஒரு வெள்ளிக்கிண்ணத்தில் போட்டு மன்னரிடம் தந்தார்கள் அந்தக் காவலர்கள். "என்ன இவை? யார் இந்த மனிதன்?" மன்னன் ஒன்றும் விளங்காது கேட்டான்.

"மன்னா! ஓவியன் மன்னா. அந்த ஓவியன்தான்! உன் மகளை - அந்த உயிர்ச்சித்திரத்தை - தூரிகையின் துணைகொண்டுவண்ணக்குழம்பால் வகையோடு தீட்டிக் காட்டிய வர்ணக்காரன்தான் வேந்தே, வர்ணக்காரன்தான். இன்று உம் முன்னால் விழிஇழந்து நிற்கிறேன்; விழியிருந்த இடத்தை ரத்தக்குழியாக்கி நிற்கிறேன். இதோ பார், உமது கண்ணையும் கருத்தையும் கவர்ந்த கவினொழுகும் ஓவியத்தை வரைந்து காட்டிய ஓவியன் கபோதியாக நிற்கிறேன் பார் மன்னா! ஏன் என்று கேட்கிறீரா? எப்படியானாய் இப்படிக் குருடனாய் என்று வினவுகிறீரா? சித்திரம் கண்டு என் கைத்திறனுக்கு உத்திரவாதமளித்தீர் - மர்ஜியானா-மாசற்ற என் குலவிளக்கின் மறுபதிப்பு உன் ஓவியம் என புகழ்ந்தீர் - புளகாங்கிதமடைந்தேன. ஆனல், "புகழ் போதும் மன்னவா, பொற்குவியல் வேண்டாம் கொற்றவா, என் மனச்சான்று கொல்லுகிறது; உன்மகளைக் காட்டு - என்ஓவியம் சரிதானா பார்க்கிறேன். அதுபோதும் வேந்தே" என்று கெஞ்சினேன். இனத்துக்கு இழுக்கு என்றீர், குலத்துக்கு அவமான மென்றீர். சகித்துப் பார்த்தேன் - என் சித்தம் கேட்கவில்லை சக்கரவர்த்தியே! கலையுள்ளம் கட்டுக்காவலைப் பொருட்படுத்தவில்லை. மாற்றார் முகம் நோக்கா மகமதிய மாது சிரோண்மணியை- நீர்பெற்ற மர்ஜியானாவை-இந்த ஓவியத்தின் மூல விக்ரகத்தை காணப் புறப்பட்டேன். கட்டைச்சுவர்கள் பல கடந்தேன்-காஷ்மீர் பட்டுகள் - கடைந்தெடுத்த சிற்பங்கள் வனப்புச்சிந்தி வசீகரம் சேர்க்கும் சொர்ணமணி மாளிகை புகுந்தேன்-ஆம் - கண்டேன்-மர்ஜியானாவைக் கண்டேன்-இல்லை-எனது ஓவியம் உயிர்பெற்று தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன்-இதே கண்கள் - வெள்ளிக் கிண்ணத்தில் வைத்துக்கொடுத்தார்களே உனதுவேங்கைப்புலிகள்-அந்தக் கண்களாலேயே உமது மகளின் திருவுருவை மேயவிட்

(8-ம் பக்கம் பார்க்க)

[குதிரையைத் தானே நடத்துகிறான் ஓட்டக்கூத்தன். பறந்து கிளம்பிய குதிரையின் குளம்படிகளில் சிக்கிச் சுருண்டு விழுகிறான், கிழவன். ரதம் மறைகிறது. தெருவில் நிற்கும் கூட்டம் ஓடிவந்து கிழவனை வாரி அணைக்கிறது. சாளரத்திலே நீண்டிருந்த தலைகள் யாவும் மறைகின்றன. கீழ்வாயில் வழியே அனைவரும் ஓடி வருகின்றனர். கிழவனைக் கேலிசெய்த தானை இளைஞன், அவன் கண்களில் அனல் பறக்கிறது.]

ஒரு : த்சு! த்சு! நல்ல அடி!

இரண் : முழங்காலில் சக்கரம் ஏறிவிட்டது!

மூன் : திருட்டுப் பயல்! திமிர் பிடித்தவன்! என்ன அதிகாரம் பார்!

ஒரு : நான் அவனை உதைத்திருப்பேன். அரசன் அவனுக்குத் துணை நின்றால்தான் என்னையா! இப்படிப்பட்ட அயோக்கியர்களை விடவே கூடாது!

இரண் : தைரியமாக ஏற்றிவிடுவானென்று நான் எண்ணவே இல்லை!

ஒரு : அவன் செய்வான்! எனக்கு அப்பொழுதே தெரியும்! அம்பிகாபதியைப் பழிவாங்க தூக்கமில்லாமல் அலைந்தவனாயிற்றே அவன்!

இளை : ஒட்டக்கூத்தன்! வெறிபிடித்தவன்! காவிய உலகிற்கே களங்கம்! அட கூத்தா! இனி நடக்காதடா உன் கூத்து! நாடு தூங்கிவிடவில்லையடா நயவஞ்சகா! பொறு! பொறு! உனது இறுதிக்காலம் வந்துகொண்டிருக்கிறது! அது வரையில் பொறு!

ஒரு : சரி; தூக்குங்கள்! அஞ்சனவண்ணர் இல்லத்திற்குக் கொண்டுபோகலாம்.

இர : பிழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கில்லை,

மூன் : மூச்சு வருகிறதா?

நான் : லேசாக வருகிறது. சிக்கிரம் அஞ்சனவண்ணரிடம் காட்டினால் பிழைத்துக் கொள்ளலாம்.

ஒரு : இல்லை ஐயா! மூச்சே நின்றுவிட்டது.

மூன் : சரி ஐயா! எதற்கும் அங்கு கொண்டு செல்வோம்; தூக்குங்களேன்!

[கூட்டம் கிழவனைத் தூக்கியபடி செல்கிறது. இள நங்கையர், பாங்கி வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொள்கின்றனர். இளைஞன் நின்ற இடத்திலேயே சிலையாகி மெய்மறந்துபோய், கண்ணீர் சொரிகிறான்.]

—காட்சி முடிவு—

களம் 2

காட்சி : 2
இடம் : இடுகாடு.
நேரம் : நிலா எரிக்கும் இரவு:

[அமைதி அரசாளும் இடுகாடு. நிலவொளியில் ஒரு உருவம்--கம்பன்--நிற்பது தெரிகிறது. சோகமே உருவாகக் கம்பன் நிற்கிறான்.]

கம் : [தனிமொழி] வாலிப உலகின் கனவுகள் அஸ்தமித்துவிட்டன! மானிடசாதியின் பரம்பரை உரிமை மரண நாடகமாடுகிறது. மகனே! அதன் முதல் அங்கத்தை நீ தான் துவக்கிவைத்தாய்! "மைக்கிணையான விழிக்கணை கொண்டு மயக்கி," கைக்கிசைவாகக் கவிழ்ந்து, முத்துமணியாரம் முகம் சுருங்கித் துவண்டுவிழக் காதல் புரிந்து உன்னைத் தனதாக்கிக் கொண்டாளே--அவள்--அந்த நாடகத்தின் முதலங்கத்திற்குத் திரைச்சீலை எடுத்தாள்--காட்சி அமைத்தாள்--மகனே! அதன் பிறகு தான் நீ முதலங்கம் துவங்கினாய்! கண்ணிணை ஒன்றை ஒன்று கவ்வி, உண்ணவும் நிலைபெருதுணர்வு நீங்கி,

கண்ணதாசன்

கட்டற்ற காதலின் எல்லை
சோகத்தின் மறுப்பக்கம்
அதிலும் அனுபவமும்
கண்ணீர், அதனால்
இறந்தாலும் கண்ணீர்!"

ஒன்றுபட்ட வண்ணக்காட்சி முடிந்துவிடக் கூடாதென்று, அந்த அன்னக்கொடியாள் உன்னைத் தொடர்ந்துவிட்டாள். நேற்றுப் பார்த்தவள்--நெஞ்சு கலந்ததால் உறவு கொண்டவள்--நீ செத்ததற்குச் செத்தாள்! ஆனால்... தூக்கி வளர்த்துப் பெயர் சூட்டி, மார்பகத்தில் சேர்த்து மகிழ்வுற்று, தேர்போலச் சிங்காரித்து சீராக வளர்த்தானே கம்பன்--உன் தந்தை--அவன் இன்னும் சாகவில்லை! மீளுவான் மகன் உயிரோடு என்றாலும் ஏழிரண்டாண்டுகள் பிரியும் ஏக்கத்தில் மாண்டு விழுந்தான் மன்னன் தயரதன்! ஆனால்... ஆண்டுக் கணக்கல்ல! அகிலம் உள்ளமட்டும் மீண்டும் வரமாட்டாய் நீ என்றறிந்தும் சாவாதிருக்கிறான் உன் தந்தை! ஆம்! கம்பன் கல்நெஞ்சன! அதில் அவனுக்கு இணையானவர் யாருமில்லை!

பரப்போத ஞால மொருதம்பி யாளப் பனிமதியம்
துரப்போ னொருதம்பி பின்வரத் தானுந் துணைவியுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதைபொறுதுயிர்
மாய்ந்தனனெஞ்
சுரப்போ வெனக்கிங் கினியா ருவமை யுரைப்பதற்கே!

[கம்பனின் கண்கள் "நிரந்தரக் குள"மாகக் காணப்படுகின்றன. பின்னால், மெதுவாக வருகிறான் புகழேந்தி. அமைதியில் நின்ற கம்பனின் தோளில் கைவைத்து...]

புக : கவிமன்னா!

கம் : (திரும்பி) இல்லை! அவன் இறந்துவிட்டான்! இப்போதிருப்பது சாதாரண மனித உணர்ச்சிகூட இல்லாத மரக்கட்டை! புகழேந்தி! கம்பனின் கரம்விட்டுப் போகாத எழுத்தாணி, இப்போது எங்கே கிடக்கிறது என்று தேடிப் பார்! அவன் குடிசையிலே ஆல் முளைத்திருக்கிறதா வேல் முளைத்திருக்கிறதா என்று பார்!

புக : அமைதிகொள், கவிமன்னா! அவனிக்கெல்லாம் ஆறுதல் சொல்வாயே! அரசர்க்கெல்லாம் அறநெறி போதிப்பாயே! காவிய வரம்பில், காட்டை நாடாக்கிக் காட்டுவாயே! அதே கம்பன்தானே நீ! அதே உள்ளம்தானே இன்னும் உன் உள்ளம்!

கம் : ஆம்! ஆனால்...ஒரே மகன் பிரிந்தால், எந்த உள்ளமும் சுக்கலாகிவிடுவதில்லையா, புகழேந்தி!

புக : அது சாதாரண மனிதர்கட்கு! மகாகவி கம்பனுக்கல்ல! அலைசுருட்டும் கடல் குமுறி அருகில் வந்தாலும், நிலைகுலையாத உள்ளம்--அசைவுறாத உடல்--நடுங்காத கரம்--நழுவாத எழுத்தாணி கவிமன்னனின் தனிப்பெருமை! கம்பநாட! கொலைக்களத்திலே நீ குமுறி அழுதபோது இயற்கையென்று உலகம் சம்மதித்தது! இன்னும் உன் நிலை அதுதான் என்றால், இணையற்ற கோழையென்று உலகம் தூற்றும்! கவலையை விடு! கண்ணீரைத் துடை! ஏட்டைப் பிடி! எழுத்தாணியை எடு! ஈடுகாட்ட முடியாத காதற்காவியம் பாடு! தமிழுக்கு அதுவும் வேண்டும்!

உன்னையன்றி வேறு யார் உணர்ச்சிமிக்க காதற்காவியம் பாடமுடியும் !

கம் : (மெல்லச் சிரித்து) காதற்காவியமா ! இப்போது நான் பாடினால், காவியம் சோகத்தில் துவம், புகழேந்தி !

புக : கட்டற்ற காதலின் எல்லை, சோகத்தின் பிறப்பிடம் ! அதிகம் அழுதாலும் கண்ணீர் ! அதிகம் சிரித்தாலும் கண்ணீர் ! தாளமாட்டாத துன்பச்சேதி--எதிர்பாராத இன்பச்சேதி--இரண்டிலும் மெய்சிலிர்க்கும் ! வரம்பு தாண்டிய எந்த உணர்ச்சிக்கும் சோகத்தின் சாயல் உண்டு ! கம்பநாட ! உனக்குத் தெரியாததில்லை ! வா, போகலாம் ! உணவுகொள் முதலில், பிறகு பேசலாம் !

[இருவரும் திரும்ப, சிலர், சங்கு ஒன்றை ஊதியவாறு வருதல். கூர்ந்து கவனிக்கிறார்கள், கம்பனும் புகழேந்தியும். கூட்டம் அருகில் வரும்போது, அவர்கள் ஒரு பிணத்தைச் சுமந்துவருவது தெரிகிறது. பிணம் கீழே வைக்கப்பட்டு, விறகு, சந்தனக் கட்டை, வரட்டி முதலியன அடுக்கப்படுகின்றன. புகழேந்தி, கம்பனிடம் மெதுவாக ஏதோ சொல்கிறான். பிறகு இருவரும், தலையைத் துண்டால் போர்த்தி, கிராமவாசிகள்போல், கூட்டத்தின் அருகில் சென்று நிற்கின்றனர்.]

ஒரு : கூத்தரையும் சும்மா சொல்லக்கூடாதப்பா ! அம்பிகாபதியைக் கொன்றதற்கும் இந்தக் கிழவருக்கும் என்ன சம்பந்தம் ! இவன் ஏன் வீணாக அவரை வழிமறிக்க வேண்டும் !

இர : வழிமறித்தால் என்னப்பா ! அதற்காக பகிரங்கமாக கொலை செய்வதா ! கேட்க நாதியே இல்லையா நாட்டிலே !

மூன் : சரி போகுதண்ணே ! முதல்லெ காரியத்தைப் பாருங்க !

[கம்பன், கிழவனின் பிணத்தை கவனித்தவாறு நிற்கிறான். புகழேந்தி அவன் தோளில் தட்டி சைகை காட்டுகிறான். கம்பன் நடக்கிறான். புகழேந்தி முன்னால் செல்கிறான்.]

புறவார் நறுமுல்லை போல்நகை யார்பொய்த லாடுஞ்சிற்றில்
நறவாடு சந்தனம் நாறுதண் சாரல் நயந்தஇன்பம்
மறவாத நெஞ்சும் வனமுலை தோயு மணிப்புயமும்
உறவாடி நிற்பர்கொல் லோஎன்னை ஆளும் ஒருவர்வந்தே !

புக . கம்பநாட ! நாட்டிலே உங்கள்மீது அனுதாபமிருக்கிறது ! அம்பிகாபதிக்காக அழவும் சாகவும் ஆட்களிருக்கின்றனர். எப்போதுமே சிலரது சாவு தரும் சந்தோஷச் சேதி இது தான் ! சிரி ! உன் மகன் சாகவில்லை என்று சிங்காரப் பண் பாடு !

கம் : கிழவர் யார் தெரிகிறதா ?

புக : தெரியும் !

[கம்பன் கண்ணீரைத் துடைத்தபடி நிமிர்ந்து நடக்கிறான். புகழேந்தி பெருமூச்சு விட்டு ஆறுதல் அடைகிறான். நடக்கிறார்கள்...]

—காட்சி முடிவு—

களம் 3

காட்சி : 3

இடம் : குலோத்துங்கன் அரண்மனை.

நேரம் : காலை.

[வானளாவிய அரண்மனையின் உட்புறம். குலோத்துங்கன் பள்ளியறை. அதிகாலையில்-கண்விழிக்கிறான் குலோத்துங்கன். "காதலர் கொல்லப்பட்டு இன்றோடு இருபது தினங்கள்" என்னும் எண்ணம், முதல் எண்ணமாக அவன் நெஞ்சினில் பிறக்கிறது. எழும்போதே பாரம் ! எழ மனமில்லை. படுக்கையில் சாய்ந்தவாறே சிந்தனை உலகிற்குக் குடிபோகிறான். அவன் இதயம் அவனை அணு அணுவாகச் சிதைக்கிறது.]

குலோ : இதயம் :

பொழுது விடிந்து விட்டது. உலகம் விழித்து விட்டது. உயிர்வர்க்கங்கள் இரைதேடப் புறப்பட்டு விட்டன. அரண்மனையின் அத்தனை பகுதிகளையும் கடந்துவரும் அந்த சப்தத்தைக் கேட்க உன்னால் முடிகிறது ! ஆனால்... குலோத்துங்கா ! வெறிச்சிட்ட பாலைவனத்திலே உன் விழிகள் இமைகளை விலக்கிவிட்டன ! பிடித்து நிறுத்தப் பட்டிருக்கும் தூண்களோடுதான் அவை பேசமுடியும் ! காற்றுக்கு நடனமிடும், உயிரற்ற திரைச்சீலைகள், உன் கண்மணியின் உருவத்தைப் பிரதிபலிக்கச் சக்தியற்றவை ! எழுதப்பட்டிருக்கும் ஓவியங்கள்--நிறுத்தப்பட்டிருக்கும் தந்தச் சிலைகள்--உன் இதயத்திலே பாச உணர்வைத் தர முடியாது ! சொர்ணபூமியின் காவலனே ! நீ தன்னந் தனி ஆள் ! ரத்தபாசமே இல்லாத கீழ்மனிதன் !

[குலோத்துங்கன் அமைதி இழந்த மனதோடு எழுகிறான். நடக்கிறான்.]

பிறக்கும்போதுதான் மனிதன் நிர்வாணமாகக் கிடக்கிறான்--ஆனால் ஆத்திரங்கொண்ட மனிதன், ஆத்திரம் வரும்போதெல்லாம் நிர்வாணமாகிவிடுகிறான் ! நல்லது கெட்டது தெரியாத குழந்தையாகிவிடுகிறான். சாதாரண மனித உணர்ச்சிகூட அற்றவனாகிவிடுகிறான் ! திரிபுவன வீர தேவனே ! நீயும் அந்த நிலையில்தான் இருந்தாய், கொலைக்கு உத்தரவிடும்போது !

[குலோத்துங்கன் ஒரு ஆசனத்தில் அமர்கிறான்.]

நீரோடி, விழியிரண்டும் ஆறாகக் கண்டாய் ! நேரிழையாள் முகமலரை இருள்சூழக் கண்டாய் ! சீராளன் முகம்பார்த்துத் தேம்பியழக் கண்டாய் ! சித்தரித்த பூங்கொடியாள் வாடிவிழக் கண்டாய் ! கல்லேனும் மனமிரங்கும் காட்சியதைக் கண்டு !' காணுதார், கேட்டாலும் கவலையுறல் உண்டு ! ஊராரின் மனநிலையே இதுவாகும் போது, ஊட்டிவளர்த்தவனே ! உனது நிலை யாது ? எள்ளிச் சிரித்தாய் ! ஏலேன் என்றாய் ! கள்ளமிலாக் கண்மணியைக் காலாலே உதைத்தாய் ! குற்றம் என்ன ? காதல் ! காதல் ! குலோத்துங்கா ! காதலுக்கு மரண தண்டனை விதித்தவன்--தென்னகத்து வரலாற்றிலே நீ ஒருவன் தான் ! நீதிமுறையிலே நிமிர்த்தமுடியா வளைவு ! அதிகார எண்ணத்தில் கொலைகாரன் ஆனாய் ! அதன் மூலம் அமைதிபெற நினைத்தாய் ! முடிந்ததா உன்னால் ! கிடைத்ததா அமைதி ! முன்பு பகலில் தான் வேதனை ! இப்போது இரவிலும் வேதனை ! ஆத்திரக்காரனே ! அமைதி, அதிகாரத்தால் வராது ! ஆத்திரச் செயலால் வராது ! அறிவுடம்பட்ட சிந்தனை--அது யார்பற்றியதாயிருந்தாலும்--அதுதான் அமைதிதரும் ! அட பரிதாபத்திற்குரியவனே ! அடுத்தவர் உனக்கு அறிவுரை போதிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டாயே ! இன்னும் என்ன மன்னவன் பதவி !

[குலோத்துங்கன் துயரத்தோடு எழுந்து, அடுத்த அறைக்குள் செல்கிறான். அந்தப்புரத்தின் ஒரு பகுதி.]

இதோ ! உன் மகன் உல்லாச கீதம் பாடிய இடம் ! அன்றொரு நாள்... ஆடை அணிமணி சூடி, 'அப்பா' என்றுனை நாடி, "நான் பாட்டுச் சொல்லிக்கொள்ள வேண்டும் !" என்று கேட்டானே... அது இங்குதான் ! இதோ இந்த இடத்தில்தான் ! கவனித்துப் பார் ! அப்போது இந்த அறையிலிருந்த பரபரப்பை எண்ணிப் பார் ! இடுகாட்டு அமைதியை எதிரொலிக்கும் இந்த வேதனையை எண்ணிப் பார் ! அட, சேர்ந்து வாழும் சிறப்பை இழந்தவனே ! இது உனக்கு இன்பமாயிருக்கிறதா ? இனி, அந்தக் காட்சியை நீ காணமுடியாது ! வாடிக் கிடக்கும்

துக் காட்டும்! என்றென்றும் அவை உன் இதயத்தை வேல்கொண்டு தாக்கும்! குலோத்துங்கா! நீ நடக்கிருய்-பேசுகிருய்--உணவு கொள்கிருய்--உடை அணிகிருய்--தேரில் செல்கிருய்--ஊர்வலம் வருகிருய்--ஆனுலும் நீ செத்துவிட்டாய்! சாம்பலாகிவிட்ட உன் மகளின் சமாதிக்கிருக்கும் பேசும் சக்தி--நிச்சயமாக உயிரோடிருக்கும் உனக்கில்லை! நீ அவளைக் கொன்ருய்! ஆனுல் அவள் வாழ்கிருள்--நீ செத்துவிட்டாய்!

[குலோத்துங்கன் வெறிபிடித்தவன் போல், அறையை விட்டு வெளியேறுகிருன். காவலன் ஒருவன் அவனை எதிர்கொண்டு, அவன் காதில் ஏதோ மெதுவாகச் சொல்கிருன். மன்னன் முகம் கடுகடுக்கிறது! அவன் வாய், "கூத்தரா! கூத்தரா! அவரா கொன்ருர்!" என்று கதறுகிறது. "நீதிமன்றத்தைக் கூட்டச்சொல்!" என்ற உத்தரவு பிறக்கிறது. மறுகணம், "வேண்டாம்! பொறுத்துப் பார்ப்போம்!" என்ற அமைதி வருகிறது. குலோத்துங்கன் திரும்பி ஓடிப் படுக்கையில் சாய்கிருன்.]

[தொடரும்]

உயிர்ச் சித்திரம்...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

டேன்-கநத்து குளிர்ந்தது. உமது உத்திரவாதத்தை நினைந்து மகிழ்ந்தேன். ஆனுல், அடுத்த கணம்? மார்ஜியானு விழித்தாள்-அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மன்னு, அந்த நேரத்தில், அழகியின் விழிகளுக்கு அருபியின் கண்களைப் பிடுங்கிவிடும் சக்திஉண்டோ என்றுதான் நினைத்தேன். விழியை வேலுக்கு ஒப்பிடுகிருர்களே வர்ணனைக்காரர்கள், அது மெய் என்றுதான்கருதினேன்.ஆனுல்,வேந்தே! டில்லிக்கு அதிபனே - உம்முடைய வைளாட்கள் கூர்வேல் பாய்ச்சி பிடுங்கிவிட்டார்கள் கண்களை என்று பின்புதான் அறியவந்தேன் தேசபிதாவே! ஒளிவிழி பறிகொடுத்து உலகின் தோற்றம் இழந்துநிற்கிறேன். அதோ மரணமேடை என் மனக்கண்களுக்குத் தெரிகிறது; ராத்திரி வேளையிலே ராஜகோட்டை தாண்டினேன். குற்றம்தான்;மணமேடை ஏற இருந்த மகமதிய மன்னர்குல மங்கையை காணத் துடித்தேன்; மறுக்கமுடியாத குற்றம்தான் பெருங்குற்றங்கள் புரிந்துவிட்டேன் - தரும் தண்டனை விரைவிலே தந்துவிடும் மன்னவா! என் கலையார்வம் செத்துப் போகட்டும்! கலையுள்ளம் கசங்கிச் சாகட்டும்; தண்டனை என்ன? சொல்லிவிடும்! என் நினைவாக உன் நாடு முழுதும் என் ஓவியங்கள் இருக்கின்றன. இனி இந்த அவனிக்கு நான் வேண்டாம்; இந்தக் குருடன் வேண்டாம்; வேண்டவே வேண்டாம். எங்கே தண்டனை? நீ உட்கார்ந்திருக்கும் இடம் எனக்குத் தெரியவில்லை. இல்லாவிட்டரால் உம் காலில் விழுந்து கேட்பேன்." ஓவியன் கதறினுன்.

டில்லி வேந்தனின் கண்களில் நீர்துளித்தது. மன்னனுல் தன் கருத்தை ஓவியனிடம் தெரிவிக்க முடியவில்லை. பிரதம மந்திரியிடம் ஜாடை காட்டினுன்.

"ஓவியரே, மகாராஜா உம்மை அழைத்து வரச்சொன்ன தன் காரணம் அறியீரா? மன்னர் தன் மகளை இன்று உமக்குக் காட்டிவிடுவதென்றே' முடிவுகட்டியிருந்தார். எதிர்பாராத விதமாக இவ்வாறு நிகழ்ந்துவிட்டது. அதோ மார்ஜியானு தனியறையில் வைக்கப்பட்டிருக்கிருர்" என்று மந்திரி கண்கலங்க சொல்லிமுடித்தார்.

மன்னர் 'மார்ஜியானு, மார்ஜியானு' என்று கதறிவிட்டார். மார்ஜியானு "அப்பா, அப்பா" என்று கூவிக்கொண்டே மன்னனின் காலில் விழுந்தாள். ஓவியனின் கண்களிருந்த ரத்தக்குழியிலிருந்து ரத்தமும், கண்ணீரும் சேர்ந்து வடிந்தன. 'மார்ஜியானு, நீதான் என் உயிர்ச்சித்திரம் மார்ஜியானு; ஆம்;என் உயிரை வாங்கிய சித்திரம் என்று சொல்லுகிறேன் பெண்ணே! இந்தப் பாவியின் நினைவு உங்கள் உள்ளங்களிலே இருக்கவேண்டாம். இருக்கக்கூடாது. இந்த ராஜவம்சத்தினரின் அகத்திலே இருக்கத் தகுதியற்றவன்இந்தத் தரித்திரன்" என்று கூவிக்கொண்டே தன் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்த துணிப்பையிலிருந்த ஒரு வர்ணப் பெட்டியை எடுத்து நிதானத்தோடு தனக்கு வலப்பக்கத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த மார்ஜியானுவின் படத்தின்மீது வீசினுன். அந்த வர்ணம் சிதறி அந்தச் சித்திரத்தையே அலங்கோலம் செய்துவிட்டது. ஓவியன் ஏனே பேய்ச் சிரிப்புச் சிரித்தான். மார்ஜியானு பெருங்கூச்சல் போட்டாள். மன்னர் மயக்கம் கண்டு ஆசனத்திலிருந்து விழுந்தார். இடுப்பிலே சொருகியிருந்த மன்னன்வாள்,தன் காலடியிலே சாய்ந்துகிடந்த மார்ஜியானுவின் கன்னதில் ஒரு பெரும் பிளவை உண்டாக்கிவிட்டது.அந்தப் பிளவு மார்ஜியானுவின் ஆயுட்கால முழுதும் அழியவே இல்லை. அந்தக் குருட்டு ஓவியன் புலம்பியே செத்தான்.

-பிறமொழிக் கதை யொன்றின் தழுவல்

◉

பேராசிரியர்

சுந்தரனுர் மன்றம்

6-6-55 அன்று சுமார் மாலை 7 மணியளவில் படிப்பக மனையில், சௌந்திரபாண்டியனுர் படிப்பக சார்பில், மறைந்த பேராசிரியர் சுந்தரனுர் நாடகமன்றம், தோழர் அன்புமணி அவர்கள் தலைமையில் நிர்வாக குழு அமைக்கப்பட்டது. அதுபோது தோழர் த. ல. கோவிந்தசாமி தலைவராகவும், கே. லா. சந்திரமோகன் செயலாளராகவும், மு. ச. அழகரசன் துணை செயலாளராகவும், கோ. வேந்தன் பொருளாளராகவும், அ. கண்ணபிரான் பொருப்பாளராகவும், தோழர்கள் மாசிலாமணி, கோ. பரமதயாளன், மு அன்புமணி, வ. மலர்மன்னன், எஸ். எம். சின்னசாமி, என். சிட்டிபாபு, பெ. கோவிந்தன், மதிவாணன், வி. எஸ். சுந்தரம், சுப்பராம், இரா. பாபு, கோதண்டன் ஆகியோர் செ. கு. உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கேள்விப்பெட்டி...

(கடைசி பக்கத் தொடர்ச்சி)

சமத்துவமடைந்தது. பல்லவர்கள் காஞ்சியை ஆண்ட காலத்தில்தான் அதாவது நான்கு முதல் ஒன்பதாம் நூற்றுண்டு வரை.

பன்னிரண்டாம் நூற்றுண்டு முதல் இரு கண்கள் சரிசமமாக கருதப்படும்நிலை குறைந்து வந்தது. வடமொழிக் கண்ணுக்கு வரவர வெண்ணெயும் தமிழ்க் கண்ணுக்கு வரவர சுண்ணும்புமே பூசப்பட்டது. அதன் பயனுக இன்று வடமொழி உலக அரங்கில் இலத்தீன், கிரேக்க மொழிகளுடன் ஒப்பாக உயர்தனிச் செம்மொழியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்கோடானுகோடி பண்படா தாய்மொழிகளுள் ஒன்ருக இந்திய அரசாங்கத்தில் கருதப்படுவதுடன், மற்ற மொழிகளைப்போல் ஆரியத்திற்கு அடிமைப்பட வேண்டும் என்று வலுக்கட்டாயப்படுத்தப் படுகிறது.

இந்த வலுக்கட்டாயத்திற்கு காரணமான அரசியல் எல்லை பரத கண்டம், தமிழர் அந்த எல்லையை ஏற்காமுடியாததற்கு காரணம் அதுவே. ஏற்ருல் தம் மொழிப் பண்பை அவர்கள் அழியவிட வேண்டும்.

இதே வலுக்கட்டாயத்திற்கு தமிழர்களை வணங்கவைக்க அரசியல் ஆதிக்கம் கொண்டும், கோயில் ஆதிக்கம் கொண்டும் தங்கள் நயவஞ்சகப் பண்பாடு கொண்டும் பிராமணர் அரும்பாடு படுவதனுல் தான் தமிழர் அவர்களையும் இனத்தால் தமிழர் என்று கூறமுடியாமல் இருக்கிறது.

நம் மேடை

போடி
25-6-55
கி. மனுேகரன்
எஸ். முத்து

சேவூர்
25-6-55
க. அறிவழகன்

சிதம்பரம்
26-6-55
க. அறிவழகன்

வேலூர்
26-6-55
இரா. நெடுஞ்செழியன்
சி. பி. சிற்றரசு
முல்லைசத்தி

பெரியகுளம்
26-6-55
கி மனுேகரன்
எஸ். முத்து

பழைய ஆயக்குடி
27-6-55
கி. மனுேகரன்
எஸ். முத்து

அலசூர் (பெங்களூர்)
3-7-55
கண்ணதாசன்

மதுரை மாவட்ட கிளைக் கழகத் தோழர்களுக்கு.

மாநில மாநாட்டு நிதி இம்மாதம் 20ந் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று அறிக்கைகள் விட்டும் இருமுறை கடிதங்கள் எழுதியும் இதுவரை கொடுக்காதிருக்கிற கிளைக்கழகங்கள் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன். அவசரம் உடனடியாசச் செய்யுங்கள், —எஸ். முத்து.

'நம் நாடு'—மூன்ரும் ஆண்டு விழா

'நம் நாடு' இதழின் மூன்ரும் ஆண்டு துவக்க நாளான 15-6-55 அன்று 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள், அறிஞர் அண்ணு அவர்களுக்குப் பாராட்டும், ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும் வழங்கினர். விழாவுக்கு அ. பொன்னம்பலனுர் தலைமை வகித்தார். துவக்கத்தில் அலுவலகத் தோழர்கள், அறிஞர் அண்ணு, ஆசிரியர் நெடுஞ்செழியன் ஆகியோருடனிருந்து புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர், இனியதொரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது. ஒலிப்பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்ட இன்னிசை, தேநீர் விருந்தினைச் சிறப்பித்தது. விழாவிற்கு தோழர்கள் என். வி. நடராசன், எஸ். கசேந்திரன், கே. எம். கண்ணபிரான், இளம்பரிதி, எஸ். எஸ். பி. லிங்கம், கே. பி. சுந்தரம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். விழாவின் வெற்றி, அனைவரையும் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்திற்று,

ராஜகுமாரி - சாமிநாதன்

நாட்டரசன்கோட்டை திரு. கே. சாமிநாதன் **B.Sc., B.L.** அவர்களுக்கும், சென்னை திரு. ஏ. வி. தியாகராசா (டைரக்டர் மிட்லண்டு இன்சூரன்ஸ் கம்பெனி) அவர்களின் புதல்வி **திருமதி ராஜகுமாரிக்கும்** நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தையொட்டி 18-6-55 சனி மாலை மைலாப்பூர் வுட்லண்ட்சில் வரவேற்பும் தேனீர் விருந்தும் நடைபெற்றது. சென்னை அமைச்சர்கள் உயர்தர அதிகாரிகள், நண்பர்கள் உறவினர் அனைவரும் வரவேற்பில் பங்கேற்றனர். மணமக்கள், அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். இசையரசு தண்டபாணி தேசிகரின் இன்னிசையோடு விழா முடிவுற்றது.

வாழ்க மணமக்கள்.

கம்பன் துரோகியல்ல ; ஏன் ?

★ ★

பிரபல தமிழ் எழுத்தாளர் ஒருவர் 'சந்தனத் தேவன்' என்ற புனைப்பெயரில் "கம்பன் யார்" என்பதற்கான ஆதாரத்தோடு இந்தக் கட்டுரையை எழுதியனுப்பி யிருக்கிறார். படியுங்கள் ; சிந்தியுங்கள்.

என் வாக்குமூலம் :--கடவுள் படும்பாட்டை விட, கம்பன் படும்பாடு சொல்லுக் தரமன்று ; ஒரு பக்கம் கம்பதாசர்கள் தாங்கிப் பிடிக்கவும் மற்றொரு பக்கம் கம்பனை வம்புக்கிழுப்போர் அறிவுகொண்டு வாது செய்வதுமான பரிதாப நிலை ; இப்படியாக இடுக்கித் தாக்குதலுக்கு இலக்கான கம்பனிடம், எனக்கு அனுதாபமோ ஆத்திரமோ கிடையாது. அதற்கு மாறாக, கம்பனைச் சந்திக்கிழுக்கும் பகுத்தறிவு வாதிகளிடந்தான், எனக்கு அனுதாபம் பிறக்கிறது. காரணம், கம்பன் மீது அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகளில் தலையாயது :--கம்பன் இனத்துரோகி, ஆரியகுல ராமனை ஏற்றியும் திராவிட குல இராவணனைத் தூற்றியும் காவியம் புனைந்து விட்டான், என்பது. இதனை நான் வன்மையாக மறுக்கிறேன், கம்பனைப் போல, இனப்பற்றுடையோன் எவனுமில்லை என்பது என் வாதம்--முடிபு. இதற்குச் சான்று கூறவே, இந்தக் கதை! கம்பதாசர்களில் முதன்மையான திருவாளர் தே. போ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய புத்தகத்திலிருக்கும் சில வரிகளே இக்கதைக்கு ஆதாரம் ; *சில இடங்களில், பொடி வைத்து ஊதியது மட்டும் என் கைங்கர்யம்!*

நள்ளிரவில் !

திருவெண்ணெய்நல்லூர் தேரோடும் வீதியில் !

சயம்புநாதர் கோவிலில் !

"நாதா ! நாதா !"

"யாரது ! சிங்காரவல்லியா ?"

"ஆம், கண்ணாளா ! விரைவில் கதவைத் திறங்கள் !"

"வந்துவிட்டேன், வண்ணப் பூவே ! எங்கே, இன்று வருவாயோ மாட்டாயோ என்று ஏங்கித் தவித்தேனே ! வழிமீது விழி வைத்துக் கிடந்தேன் ; தென்றல் தவழும் போதெல்லாம், கோவிற் மணிக்கதவு கிண்கிணி இசை யெழுப்பும் ; அதுகேட்டு, நீ தான் பொற் சலங்கை குலுங்க வருகிறாயோவென, எத்தனைமுறை ஏமாந்திருப்பேன், தெரியுமா ?"

"அப்படியா அன்பரசே ! நானென்ன செய்யட்டும் ? அடுத்த வீட்டுக்கிழம்--எதிர் வீட்டு இளைஞன்--இவர்களுக்கும் தூக்கத்திற்கும் பகையோ என்னமோ ? அம்மா கூட..."

"என்ன சொன்னாள் ?"

"ஊர்ப்பழி வருமுன் ஊரை விட்டுப் புறப்பட ஏதாவது வழி செய்யச் சொல்கிறாள்.!'

"சிங்காரம், எதற்கும் சமயம்--சந்தர்ப்பம் வேண்டாமா ? நாமென்ன நாடோடிகளா ? நினைத்த நேரத்தில் எந்த இடத்திலும் முகாம் போட..."

"பிரபு ! சந்தர்ப்பம், நம் காதல் மாளிகையின் தலைவாசல் வரை ஏறி வந்து விட்டது ; இதோ, கதவு இடிபடும் ஓசை கூட கேட்கிறதே !"

"என்ன சிங்காரவல்லி ! ஏதேதோ பிதற்றுகிறாய்--நான் அறியா வண்ணம், நீ மட்டும் கேட்கும்படி ஓசையா ? எங்கே அந்த விசித்திர ஓசை ?"

"ஆம் நாதா ! நானொரு அறிவிலி ! அந்த ஓசையை தாங்கள் கேட்க முடியாது தான் ; ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நோகப் பெற்று, பரிந்தெடுக்கப் போகும், எனக்கு மட்டுந்தானே, அந்த ஓசை கேட்கமுடியும் !"

"என்ன !"

"ஆம் சுவாமி ! குலவிளக்கு ! பிள்ளைக்கலி தீர்க்கவந்த பேரின்பப் பேறு."

"இவ்வளவு விரைவிலா--அடி பாவி ! என் தலை சுழல்கிறதே !"

"தகாத மொழி, தலைவ ! இந்த இனிக்கும் செய்தி கேட்டு வாரி அணைப்பீர்களென எண்ணினேனே --ஆனால்..."

"வாரி அணைத்ததால் வந்த வினைதானடி, சிங்காரி ! இனி இந்த ஊரில் எப்படித் தலை காட்டுவேன் ; எப்படிப் பிழைப்பேன் -- ஐயோ ஆண்டவனே !"

"அட அக்ரமக்காரா ! ஊரார் கண்களுக்கு நான் பட்டமரமாகக் காட்சி தந்தபோது, உன் கண்களுக்கு நான் பழமுதிர்ச் சோலையாக காட்சியளித்தேனே -- பழந்தின்னும் வௌவாலாய் வந்தாய்--என் அங்கமெல்லாம் கொத்தித் தின்றாய்--சுவைக்க சுவைக்க இனிக்கிறதென்றாய் -- பொன்னே, என்றாய்--கொடியே என்றாய்--பூங்கோதாய் என்றாயே ! வெண்கதிரோனின்றி வெய்யில், தண்ணிலவின்றி, தண்மை, நீயின்றி நானில்லை என்றாயே ! அந்தப் பாகுமொழிப் பேச்செல்லாம், இன்று எங்கேயடா போயிற்று ! ஊருக்குத்தான் அமங்கலி ; எனக்கு நீ சுமங்கலி--என்றாயே ! இன்று ஆண்டவனை அழைக்கிறாயே ஆக்ரமக்காரா ! கள்ளத்தனமாக, எத்தனை இரவுகள். இந்த ஆண்டவன் சந்நிதியில் உன்னைச் சந்தித்திருப்பேன்--அப்பொழுதெல்லாம் வராத ஆண்டவன், இப்பொழுது மட்டும் வந்து விடுவாராடா ?

"நீலி !"

"நீசனே ! பேசாதேயடா ! எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். என் உடல் சுகம் வேண்டி, கட்டிய கணவனுக்கு மருந்திட்ட எனக்கு, இந்தத் தண்டனை போதாது தான் ! பாவம் ! அவர்மட்டும், உயிருடன் இருந்திருந்தால், இந்தச் செய்தி கேட்டு இன்பக் கடலில் நீந்தியிருப்பாரே ! அள்ளி அணைத்திட வரவிருக்கும், இந்தப் பேசும் பொற்சித்திரத்தை எண்ணி யெண்ணி மகிழ்ந்திருப்பாரே !"

"நிறுத்தடி, உன் சாகசத்தை ! பத்தினி வேஷம் போடுகிறாள், பத்தினி வேஷம் !"

"இல்லையடா அற்பனே ! இனி பத்ரகாளி வேஷம்தான் போடப் போகிறேன். உன் அக்ரமச் செயலை ஊரறியச் செய்கிறேன், பார் ! சித்திரம் சீரழிந்த வரலாற்றை உலகறியச் செய்கிறேன் பாரடா ?"

கணேச குருக்கள் திடுக்கிட்டுப் போனார். இதுவரை தொத்துக் கிளியாக இருந்த சிங்காரவல்லி, துரத்தும் வல்லூறாக மாறிவிட்டாளல்லவா ?

வழக்கம்போல கணேச குருக்களுக்கு சாகசம் கைகொடுத்தது.

"அடி பேதைப் பெண்ணே ! உன்னைச் சோதிக்கவே இப்படிப் பேசினேனே தவிர, வேறு கள்ளமொன்றும் என் மனதில் இல்லை."

"உண்மையிலா சுவாமி !"

"ஆம் என் இதயராணி ! பிறக்கப் போகும் பொற்சித்திரத்தை எப்படியெல்லாம் வளர்ப்பதென, இன்பக்கனு கண்டுகொண்டிருக்கும் என்னை, அக்ரமக்காரன் என்றாய் ; இன்னும் ஏதேதோ சொல்லிவிட்டாய் ! பெண்களே இப்படித்தான்--நீ மட்டும் விதி விலக்கா ?"

"க்ஷமிக்கவேண்டும், ப்ராணபதே ! ஆத்திரத்தில் ஏதேதோ கூறிவிட்டேன்."

"மன்னிக்க நான் யார் ? உன் பிள்ளையிடமே மன்னிப்புக் கேள் ; கிடைத்தால் பெற்றுக்கொள்."

"நான் பாக்கியவதி தான் !"

கொஞ்ச நேரத்தில், வல்லூறு தொத்துக் கிளியாக மாறிவிட்டது. எத்தனையோ இரவுகள் கேட்டுவந்த அந்த 'இச்' 'ஒலிகளை, அன்றும் அந்தக் கோவிலில் கேட்கத் தான் செய்தது ! சுயம்புநாதரும், வழக்கம்போல அந்தக் காமக் களியாட்டத்தை பொறுமையுடன் கவனித்துக் கொண்டு தானிருந்தார் !

★

உள்ளப் பெருக்கும் வெள்ளப் பெருக்கும் மிக்க சோணாட்டு திருவெண்ணெய்நல்லூர் திண்ணையொன்றில், வறியவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல் சடையப்பனார் அமர்ந்திருந்தார். அருகே அவரது கணக்காயரும், உள்ளூர் கோவில் குருக்களுமான கணேசன் நின்று கொண்டிருந்தான். அது சமயம், அங்கு வந்த வேற்றூரொருவர் சடையப்பரை நோக்கி,

"ஐயன்மீர் ! வாணிகம் நடத்தும் வள்ளல் சடையப்பரின் வீட்டை ஏகும் வழியெது ?" என்று கேட்டார்.

"புலவீர் ! நீவிர் எவ்வூர் ?"

"தெற்கே, பாண்டி நாடு ; மாறன்--என் பெயர் !"

"தொழில் !"

"நா வாணிபம் !"

"நன்று புலவரே ! நீர் தேடும் வணிகர் சடையப்பரை நாமறியோம்.--ஆனால் வள்ளல் சடையப்பரை மட்டும் நாமறிவோம்."

"உத்தமரே ! அவர் தான் இவர் --இவர் தான் அவர் !"

"என்னது ! வள்ளல் சடையப்பர், வணிகரா ?"

"ஆம் பெரியோய் ! இம்மையிலும், மறுமையிலும் இன்பம் பெற வேண்டி, வருவோர்க்கெல்லாம் வரையாது தரும் வள்ளல் சடையப்பன், அறவிலை வாணிகன் தானே ! நானோ, தமிழை முதலீடாகக் கொண்டு, நாவாணிபம் செய்யும், எளிய புலவன் ! அவரிடம் நான் கடைவிரிக்கப் போகிறேன்--அவரும் வாங்குவதனைத்தும் வாங்கி, எனக்கு வேண்டிய யாவும் வேண்டியமட்டும் தந்து மகிழ்வார்."

"புலவர் ஏறே ! வாழ்க உம் நம்பிக்கை ! நானே நீவிர் தேடித் திரியும் சடையப்பன் !"

"மகிழ்ச்சி ! மகிழ்ச்சி ! வாழ்க உம் சுயநலம் !"

"என்ன புலவரே ! இங்கு சுயநலத்திற்கு இடமேது ?"

"ஆம் வள்ளலே ! எமக்கீவோர், பிறர்க்கீவோராவர் ; பிறர்க்கீவோர், தமக்கீபவராவர் -- ஆகவே, உன் கொடைமடம், சுயநலத்தின் அடிப்படையில் வந்ததுதானே !

"என்ன புலமை ! என்ன புலமை !"

"முத்தமிழும் முழுதுறக் கற்ற தங்களைக் காண நேர்ந்ததே, என் பாக்கியம் !"

"வள்ளல் பெருமகனே ! தமிழை முழுதுறக் கற்றவன் எவனுமே யில்லை--தமிழ், தனிப்பெருங்கடல்--கரை காண்பதே கடுஞ் செயல்."

"முயன்றால் கூடவா...?"

"முயலலாம்--ஆனால் தடை பலஉள ; தமிழுக்கும் வறுமைக்கும்

'சந்தனத்தேவன்'

இணைந்த பொருத்தமுண்டு என் பழுத மறந்துவிடாதீர் !''

''நல்ல சூழ்நிலையில்--செல்வச் செழுப்பில்--எதும் குறையின்றி, சிறு பிராயத்திலிருந்தே, ஒருவனை தமிழின்பால் ஈடுபடுத்திளுல்கூடவா முடியாது போய்விடும் ?''

''முயன்று பாரும் !''

வந்த புலவரும் ஆசை தீர பொன்னும் மணியும் பெற்றுச் சென்றார். அதோடு சடையப்பரின் மனதில் ஆசைக் கனலை மூட்டிச் சென்றார்.

சடையப்பருக்கோ வாரிசில்லை ; வேறு வழி ? அனாதைக் குழந்தை தான ! அதற்கும் எங்கே போவது ? வளமும் வாழ்வும் செழித்திருந்த அந்தக் காலத்தில், பிள்ளை விற்பனை இல்லையே !

ஆனல் கணேச குருக்கள் மட்டும் சடையப்பருக்கு உறுதிமொழி கூறினான். அப்பொழுது அவனது ஆசை நாயகி சிங்காரவல்லிக்கு மாதம் எட்டு. இன்னும் இரண்டு மாதம் எப்படிக் கழியுமோ ?

★

அந்த இரண்டு மாதமும் கழிந்தது !

ஒரு நாள் !

வள்ளல் சடையப்பரும், கணக்காயன் கணேசனும், வயல்வளம் நோக்க, ஊர்ப்புறத்தே சென்றனர். அது வேளை, சிறு பிள்ளையொன்று வீறிட்டு அழும் சத்தம் கேட்கவே இருவரும் விரைந்தனர்.

பாழடைந்த ஊர்க்கோவிலின் கொடிக் கம்பத்தருகே, பச்சிளங் குழந்தை யொன்று, துடித்துக் கிடந்தது. வள்ளல் வாரியெடுத்தார்-உச்சி மோந்தார். கிடைக்காத பேறு கிடைத்து விட்டதல்லவா ?

''கடவுளே தந்த அருட்பிரசாதம் !'' என்றார் வள்ளல்.

''ஆமாம் ! அதுவும் சுயம்புநாதர் தந்த அருட்பிரசாதம் !'' சிரித்துக் கொண்டே சொன்னான் கணேசன்.

''கணக்காயரே ! பாரும், பயல், உம்மையே பார்க்கிறான்''--என்றார் வள்ளல்.

''பாசம் இருக்காதா வென்ன ! அவனது அழுகுரலைக் கேட்ட முதல்வன், நான்தானே !'' என்று கூறி சமாளித்தான கணக்காயன்.

''என்ன சுடர் முகம் ! என்ன பொலிவு ! என்ன கம்பீரம் ! நான் கொடுத்து வைத்தவன்--என் ஆசை நிறைவேறியே தீரும்--கணேசா ! இவனைக் கல்விக் கடல கடக்கத்தக்க மகாகவியாக்குகிறேன், பார் !''

''தங்கள் சித்தம், என் பாக்கியம் பிரபு !''

இப்படியாக எங்கோ வளரவேண்டிய கம்பன், எங்கோ வளர்ந்தான் ! மொட்டைச்சி பெற்றெடுத்த பிள்ளை என்ற பட்டம் அவனை அணுகவேயில்லை.

சிங்காரவல்லியும் நிலைகுலையாத விதவையாகவும், கணக்காயன் கணேசனும் அபவாதத்திற்கு ஆளாகாமலும் வாழ்ந்தனர். சடையப்ப வள்ளலோ, புலவரிடம் போட்ட போட்டிக்கு, சோதனை நடத்த ஆள் கிடைத்தானே என்ற ஆனந்தத்தில் வாழ்ந்தார்.

கம்பன் வளர்ந்தான்.--அவன் கற்ற அறிவும் அத்துடன் வளர்ந்தது. கம்பன் வீட்டுக் கட்டுத் தறிக்கும், யோகம் பிறந்தது. இராம காவியம், அவனைப் புகழின் உச்சிக்கு ஏற்றியது. அதில் தன் இனத்தானகிய ஆரியகுல ராமனைப் போற்றியும், திராவிடகுல இராவணனைத் தூற்றியும், காவியம் புனைந்து தன் இனப்பற்றைக் காட்டிக்கொண்டான் கம்பன் !

★

தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் குறிப்பு

சிங்காரவல்லி என்னும் பார்ப்பானியர் சுயம்புலிங்கம் என்ற கோவிலில் பிள்ளைப் பேறு கருதி வழிபட்டு வந்தனர். ஆனல், அவருடைய கணவர் இறந்தார். ஆண்டவன் திருவிளையாடல் ! அவர் இறந்த பின்னும், அம்மையார், கொடிமரத்தடியில் ஒரு பிள்ளையைப் பெற்றார். பிறருக்கு அஞ்சி அங்கேயே குழந்தையை விட்டுப் போயினர். திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளலுடைய ஆளான கணேசர், அந்த வழியே வரும்போது, குழவியைக் கண்டெடுத்துப் போய், வள்ளலிடம் கொடுத்தார். கம்பத்தருகே கண்டெடுத்த குழந்தையாதலில், கம்பன் என, அந்தப் பிள்ளைக்குப் பெயரிட்டுப்பாராட்டி, வளர்த்து வந்தார் சடையப்பர்.

சிரிப்புத்தான் வருகுதையா

ஓர் கருத்துக் கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம், 'தென்றல்' இதழை நான் தொடர்ந்து படித்துக்கொண்டு வருபவன். தங்களுக்கு என்னுடைய 'ஒரே ஒரு கருத்தை' எழுதவேண்டுமென்று நெடு நாளாக ஆசை. தவருல் பொருட்படுத்தாதீர்கள். தெளிந்த அரசியல் கருத்துக்களையும், சுவைமிக்க இலக்கியக் கட்டுரைகளையும் தாங்கி வரும் தென்றலி'ல் 'சிரிப்புத்தான் வருகுதையா' இடம் பெறுவதை நான் முற்றிலும் வெறுக்கிறேன். மேலும், அந்தக் கட்டுரையைப் படிக்கும்போது சிரிப்பே வருவதில்லை. எனவே, 'சிரிப்புத்தான் வருகுதையா' போன்ற கட்டுரைகள் 'தென்றலி'ல் இனி இடம்பெருதிருந்தால் நலமாக இருக்கும்.

அன்பன்,
தென்றல்பிரியன்,
மதுரை.

குறிப்பு : 'தென்றல்' வாசகர்களில் ஒரு சிலர் 'சிரிப்புத்தான் வருகுதையா' கட்டுரையை பெரிதும் விரும்பாததால் இனிக்கொண்டு 'சிரிப்புத்தான் வருகுதையா' 'தென்றலில்' இடம்பெருது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

ஆ-ர்]

வெண்பாப் போட்டி

9 இல்லையோ வெங்கட் கிடம்!

வெண்பாப்போட்டி 9-ன், பரிசுபெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்கு தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

கல்விக் கடலமுதைக் கண்ணுங் கருத்துமாய்
பல்விதப் பண்பால் பருகுவித்தோம்--நல்குருமார்
அல்ல லுறுமல் அமைதியாய் வாழ்ந்திடவே
இல்லையோ வெங்கட் கிடம்?

—ரா. முத்துராமலிங்கம், உமரிமாநகர்.

★

நரைக்கும் வரையுழைத்தும் நாதியற்றோ ராேனும்
இரைவேண்டி எச்சிலிலை ஏற்றால்--குரைக்கிறதே
பொல்லாத நாய்கள், பசிநீங்க அவ்விடத்தும்
இல்லையோ வெங்கட் கிடம்.

—வெ. வெங்கிடசாமி, பாலையம்பட்டி.

★

பெற்று வளர்த்துப் பசுந்தமிழ்ப்பா லூட்டியநீ
மற்றவர்க்கு மேலோ மடிசுரந்தாய்--அற்றவராய்
அல்லலுற்று வாடுகின்றோம் அன்னைத் திருவிடமே
இல்லையோ வெங்கட் கிடம்.

—செந்தாமரை, கதிரம்பட்டி.

★

முடியுடைய எம்தமிழ்க்கோ முன்னாளில் வெற்றிக்
கொடிநட்ட ஈழத்தில்; இன்று--'குடியுரிமை'
இல்லையென்ற தொல்லைநீங்கி இன்பமாக வாழ்வதற்கு
இல்லையோ வெங்கட் கிடம்.

—அ. நவநீதம், கொண்டயம்பட்டி.

★

கன்னிக்கைம் பெண்கள்யாம் காதல் மணம்புரிந்து
தன்னிகரில் லாவித் தமிழ்நாட்டில்--முன்னணியாய்
நல்ல சமூகத்து நாகரிக மாய்வாழ
இல்லையோ வெங்கட் கிடம்?

—ஆர். நாராயண ரெட்டி, காதப்பள்ளி.

★

சங்க இலக்கியத்தின் சான்று பலகாட்டிச்
சிங்கத் தமிழர் சினந்தெழுந்து--மங்காத
செல்வத் திருவிடத்தை, சீர்பெறவே, தாவென்றால்
இல்லையோ வெங்கட் கிடம்!

—இல. அரவரசன், இராமநாதபுரம்.

★

இருக்க இடமின்றி யேங்கித் தவித்துத்
தெருத்தெரு வாயலையும் ஏழை--மறுக்காதீர்
தொல்லையே தீர்மின் திருவுடையீர், நீர்நினைத்தால்
இல்லையோ வெங்கட் கிடம்.

—சா. பில்லப்பன், பாகனேரி.

★

செஞ்சொற் கவிஞர்களைச் சிந்தையிற் கொள்வதற்கு
அஞ்சற் றலையில் உருவமைத்தே--விஞ்சுபுகழ்
வள்ளுவனார்க் கவ்வகையில் மாண்புசெயச் சொல்லுகின்றோம்
இல்லையோ வெங்கட் கிடம்.

—சீரான், கோம்பை.

★

பண்டைத் தமிழர்கள் பண்புடனே ஆண்டார்கள்
அண்டவந்த வாரியரின் ஆட்சியில்நாம--தொண்டுசெய்து
தொல்லைபல வேற்று துயரடைந்தோம் என்றென்றும்
இல்லையோ வெங்கட் கிடம்

—க. வீ. குருசாமி, சென்னை 12.

★

வந்தபிற நாட்டார்க்கு வாழ வழிவகுத்து
சொந்தமண் வாழுநர்க்கை சோரவிட்டனர்--மந்திரிகாள்
தொல்லைமிக வேற்றுத் துயருற்றோம் வாழவே(று)
இல்லையோ வெங்கட் கிடம்.

—க. வீ. வரதன், சென்னை 23.

★

பிச்சைப் புகினும் பசியொழிய ஏதுவிலை
இச்சமயம் சாவைத்தாம் ஏற்றாலும்--அச்சமயம்
தொல்லை தருகின்றார் தூய்மணியே! உய்யவழி
இல்லையோ வெங்கட் கிடம்.

— 'மங்கை' வேலூர்.

★

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறினென்ற--உண்மையை
கல்லி எறியும் கசடரைக் கண்டிக்க
இல்லையோ வெங்கட் கிடம்?

—சி. வரதராசன், பொட்டனேரி.

★

நாடோடி யாகவே நந்நாடு வந்தஅவர்
நாடாளு மாட்சிதனை நாடுகின்றார்--ஓடோடி
அல்லும் பகலும் அயரா துழைத்தாலும்
இல்லையோ வெங்கட் கிடம்.

—ச. மருதமுத்து, உடுமலை.

★

மார்சுவைத்தும் பால்காணா மக்களுட னெங்கணவர்
சோர்வுடனூர் சுற்றிவந்தார் சோற்றுக்கு!--நேரிலையே
தொல்லையுறும் ஏழைத் தொழிலாள ரைக்காத்தால்
இல்லையோ வெங்கட் கிடம்.

—வெ. இராசசேகரன், பழைய ஆயக்குடி.

★

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
இல்லையே என்ற இரவலர்க்கு--எல்லையில்
செல்வமு மீந்து சிறப்புற்ற விந்நாட்டில்
இல்லையோ வெங்கட் கிடம்?

—அ. வை. நாதன், குடந்தை.

★

ஓய உழைத்து ஒருபலனும் காண்கிலோம்,
சாய இடமின்றிச் சாகின்றோம்,--ஆபுங்கால்
புல்லர்வாழ் பூமியின்கீழ் ஆறடி அல்லாமல்,
இல்லையோ வெங்கட் கிடம.

—அ திங்கள்பொண்டான், கடலூர் புதுநகர்.

★

ஈன்றாய்; எமைவளர்த்தாய் இன்றுவரை என்அன்னாய்!
வான்சிறப் பீண்டிருந்தென்? வாழ்வகை--தோன்றாமல்
செல்கின்றோம் சிங்கப்பூர் சிங்கத் தமிழ்நாட்டில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—தி. சாமிநாதன், சேங்காலிபுரம்.

★

எந்நாடும் காணாத ஈதோர் புதுமைதான்
இந்நாட்டில் ஆசிரியர்க் கிந்நிலையேன்?--கண்ணோட்டம்
அல்லாத உங்களது ஐந்தாண்டுத் திட்டத்தில்
இல்லையோ வெங்கட் கிடம்.

—பீ. சாலமோன், முதுகுளத்தூர்.

★

தெங்கு கரைசூழப் பொங்கு கடல்வாழும்
சிங்களத் தீவுத் திருமகளே--இங்குவந்து
சொல்லாலே சுட்டஉண்ணாத் தொல்லை பலகண்டோம்
இல்லையோ வெங்கட் கிடம.

—க. அமரசிங்கம், சிலோன்.

★

கார்நிற்க வீடுண்டு! கற்சிலைக்கும் கோவிலுண்டு!
பார்மீதில் நாய்படுக்கப் பள்ளியுண்டு!--தார்வீசும்
கல்வீதி மேடையிலே காய்வெயிலில் சாகின்றோம்!
இல்லையோ வெங்கட் கிடம்.

—கே. என். கோவிந்தராசன், கவிந்தப்பாடி.

★

மூடக் கருத்தகற்றி முன்னேற்றக் கொள்கையினை
நாடப் புதுப்பித்தோம் நாட்டினரை--ஈடற்ற
வெல்லுந் திராவிடத்தை வேரூன்ற எந்நாட்டி(ல்)
இல்லையோ வெங்கட் கிடம்.

—மா. அருணாசலம், பழனி.

★



பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.எல்.டி.

பதில் தருகிறார்

ஶ்ரீ. சீனிவாசன், வத்தலக்குண்டு.

...ற்வரும் பாடல் எந்நூலில், யார் யாரிடம், எச்சமயத்தில் எதற்காக கூறிய பாடல் என்பதைக கூறி, நயம் பாராட்டுக.

"கங்கைப் பேர் யாற்றுக்
கருப்புனல் நீத்தம்
எங்கோ மகளை
ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர்
ஈரைஞ் ஞாற்றுவர்க்கு
ஒருநீ யாகிய
செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது
கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத்
தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை."

இந்த அடிகள் வஞ்சிக்காண்டம் 25 வது காட்சிக்காதை 160 முதல் 167 வரை வரிகள், செங்குட்டுவன் முன் குன்றக்குறவர் கண்ணகி தெய்வமாக வானுலகு சென்ற காட்சி பற்றிக் கூறுகின்றனர். செங்குட்டுவன் அரசியாகிய வேண்மாள் கண்ணகிக்கு சேரநாட்டில் கோயிலும் விழாவும் எடுப்பிக்க வேண்டுமென்று கோருகிறாள். அரசன் இதை ஏற்று அமைச்சன் வில்லவன் கோதையிடம் கருத்துரை கேட்கிறான். வில்லவன் கோதை கூறுவன இவ்வரிகள்.

அரசே! முன் பலதடவை பல நாடுகளையும் வடநாட்டையும்நீங்கள் படையெடுத்திருக்கிறீர்கள். குறிப்பாக எம் அரசியாகிய தங்கள்தாய் கங்கையில் நீராடும்படி தாங்கள் வடநாடு சென்றீர்கள். அச்சமயம் ஆயிரக்கணக்கான ஆரியமன்னரை நீங்கள் எதிர்த்து தனியொருவனாக நின்று கடும்போரிட்டீர்கள். அந்தக் காட்சியை எமனே கண்டிருந்தாலும்கூட நடுங்கியிருப்பான். ஆகவே, நீங்கள் இந்தக் கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் தமிழ் நாடாக ஆக்க எண்ணினாலும்கூட அதை எதிர்க்கத் தக்கவர் இந்தப் பரந்த உலகில் யாரும் இல்லை.

கண்ணகிக்கு கல்கொணர வட திசை மன்னருக்கு ஆணை பிறப்பித்தால் போதும் என்று வில்லவன் கோதை முடிக்கிறான்.

சீ. நரசிம்மன், இளம்பிள்ளை.

1. தாதையேவலின்
மாதுடனு போகிக்
காதலி நீங்கக்
கடுந்துயருழந்தோன்
வேத முதல்வற்
பயந்தோன் என்பது
நீயறிந்திலையோ"

நெடுமொழியன்றோ. என்று சிலப்பதிகாரத்தில் ஊர் காண் காதையில் கோவலனிடத்தில் கவுந்தியடிகள் கூறுகின்றாரே பொருள் என்ன?

2. மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத்
தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத்
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர்கேளாத
செவியென்ன செவியே
திருமால் சீர்கேளாத
செவியென்ன செவியே

சிலப்பதிகாரத்தின் 'ஆய்ச்சியர் குரவை'யில் காணப்படுகின்றதென ம.பொ. சி. கூறுகின்றாரே பொருள் என்ன?

சிலப்பதிகாரம் ஊர்காண் காதை 46, 49 வரிகளும்ஆய்ச்சியர் குரவை 'மூவுலகும் ஈரடியால்' என்று தொடங்கும் பகுதியும், ராமாயணக் கதை குறித்த பகுதிகள்.

தந்தை ஆணையால் இராமன் தன் மனைவியுடன் காடு சென்று, மனைவியையிழந்து மிகவும் துன்பப்பட்டான். இராமன் வேதங்களுக்குதலைவனான கடவுள் அவன் கூட துன்பத்துக்கு ஆளானான் என்ற பழைய மரபு உனக்குத் தெரியாதா? இவ்வாறு வழிநடந்து வருந்தும் கோவலனை ஆற்றுவதற்கு கவுந்தி கூறுகிறார்.

திருமால் தம் இரண்டு அடியால் மூன்று உலகமும் வாமனன் ஆக நின்று தாண்டினான். அந்த அடிகள் சிவந்து புண்படும்படியாக அவன் இராம அவதாரத்தில் காட்டில் நடந்து காவலையுடைய இலங்கையானை அழித்து வீரப் புகழ் பெற்றான். இந்த புகழ்க் கதையை கேளாத செவியென்ன செவி என்று ஆய்மகளிர் குரவையாடுகின்றனர்.

இராமாயணக் கதை வால்மீகிக்கு முன்பே புத்த சமண காலங்களில் பரவியிருந்த கதையாகும். அத்துடன் தமிழர் தினைத்தெய்வங்களுள் ஒன்றாகிய திருமால் வழிபாட்டுடன் அந்தக் கதை இணைக்கப்பட்டிருந்தது. பல நாடுகளில் பல இனங்களிலும் இந்தக் கதை பரந்து பல வடிவில் நிகழ்கின்றன. ஆனால், வால்மீகி காலத்து ஆரியர் அதை தம் சொந்த சரக்காக ஆரிய திராவிடப் போராட்டமாக்கிக் காட்டினர். இச்செயலால் இராமன் தினைத்தெய்வமாகிய திருமாலுடன் தொடர்புடையவன் என்ற கருத்து ஆரியரிடையே மறக்கப்பட்டது. கம்பன் கதையை தமிழில் புகுத்தும்போது சிலப்பதிகாரத்திலும் தேவாரத் திருவாசகங்களிலும் காணப்படும் தமிழ் மரபுகளையும் இணைத்து, அந்த ஆரிய சரக்குக்குக் தமிழகத்தில் விலையுண்டாக புதுக்கலவை செய்தான். தமிழரை அடிமைப்படுத்தும்ஆர்வங்கொண்ட ஆரியர் இந்த ஆரிய தமிழ்கலவையை தம் மொழிகளிலெல்லாம் மொழிபெயர்த்து, இராமாயணத்திற்கு புதுப் புகழ்தேடினர். ஆனால், கம்பன் புகழை மறைத்தனர். ஏனெனில் அது தமிழரும் விரும்பாத ஆரியரும் விரும்பாத புகழாகும்.

ம, பொ. சி. போன்றவர்கள் விரும்புவாரோ என்னவோ.

தமிழ்த்தும்பி இரா. கிருட்டிணன்,
நவலடிபட்டி

"கள்ளோ காவியமோ" என்ற நூலின்கண் பேராசிரியர் மு. வ. அவர்கள் (பேராசிரியப்பணிசெய்யும் ஒரு பாத்திரப் படைப்பின்மூலம்) மொழியாராய்ச்சியில் வெறும் சொற்களின் அமைப்பைக்கொண்டு மொழி அமைப்பை ஆராய்தல் சால்புடைத்தன்றென்றும் சொற்கள் மொழியின் உடைகளே என்பதாகவும், மொழியின் 'வாக்கிய, அமைப்பையே உற்றுநோக்கிக் ஆராய்தல் வேண்டுமென்றும் அவ்வாறு ஆராயின் தமிழும் இந்தியும் ஒரே தன்மைத்தான வாக்கிய அமைப்பை உடையதென்றும், இதனால் இரண்டும் (மற்றும் இந்திய மொழியனைத்தும்) ஒரே தன்மைத்தான உடன்பிறப்பான மொழியாகும் என்ற கருத்து முழக்கி எழுதியுள்ளார். (பாத்திரப்படைப்பான பேராசிரியர் பம்பாய் சென்று அவ்வாறு பேசினார் என்றும், மேலும் ஒரு தமிழ மங்கை அம்மொழியை இயல்பாய் அறிந்தனளெனபதாகவும் கூறுகிறார்) மேற்கூறியவற்றைப் பற்றிய விளக்கம் வேண்டுகிறேன்.

பேராசிரியரும், மொழி ஆராய்ச்சித் துறையில் பல வடநாட்டு தாய்மொழி அறிஞர்களும் கண்ட ஓர் உண்மையே இங்கு குறிக்கப்படுகிறது. பேராசிரியர் தமிழுக்கெதிராக இதை வலியுறுத்த துணிவு கொள்ள முடிகிறது. ஆனால், அதன்மூலம் தமிழின் உரிமையை வலியுறுத்த அவருக்குத் துணிவுமில்லை; அவர் சூழல் இடந்தரவுமில்லை,

தமிழ், தென்னிந்திய திராவிட மொழிகளின் நடுநாயக மொழி மட்டுமல்ல; வடஇந்தியாவிலும் வாழ வகையற்று சிதைந்து பரந்து சிதறிக் கிடக்கும் திராவிட மொழிகளின் மூலத் தாய்மொழியாகும் அது மட்டுமன்று. இன்று ஆரிய மொழிக் குழுவில் சேர்க்கப்பட்ட இந்தி முதலிய வடநாட்டுத் தாய் மொழிகள்கூட திராவிட மொழி அடிப்படைமீது மேலெழுப்பப்பட்ட ஆரியக் கலவை மொழிகளே. இவை மட்டுமல்ல. வேத மொழியும் சமஸ்கிருதமும் ஆரியக் கலப்பு மொழிகளேயன்றி தூய ஆரிய மொழிகளல்ல; தமிழுடன் கலந்தே அவை வளமும் இலக்கியப் பண்பும் பெற்றன.

உலக மொழிகளுக்கே தமிழ் அடிப்படை என்று கூறும் உலக அறிஞரும் பலர்.

மேற்கண்ட முழு உண்மையை வடநாட்டு அறிஞர் உலகத்துக்குக் கூட தெரியாமல் விழுங்கி இருட்டடிப்புச் செய்கின்றனர். நம்தமிழ்ப் பேராசிரியர் இந்திக்கு வக்காலத்து வாங்குவதற்காக இந்தப் பேருண்மையின் ஒரு மூலையை தமிழர் முன்கொணர்டு வருகிறார். முழு உண்மையும் அவருடைய மொழி நூல்கள்கூட விளக்க முற்படவில்லை. காரணம் கூறத் தேவையில்லை. அவர் சூழலே!

கு. சுந்தர், தோ. முத்தூர்.

1. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஆரியர் திராவிடர்களுள் ஒழுக்கங்களிலும் கடவுள் வழிபாடுகளிலும் பிறவற்றிலும் கலப்பு ஏற்பட்டுளளது என்று எவரால் கூறமுடியும்? உம்மால்கூறமுடியுமா? முடியுமெனில் சான்று தருக?

2. ஆரியர் பிறநாட்டிலிருந்து போந்தவரா, திராவிடர் இந்நாட்டிலேயே தோன்றியவரா? இவர்களை இந்நாளில் பிராமணரை ஆரியரென்றும், பிராமணரல்லாதாரை திராவிடர் என்றும் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? விளக்கம் கூறுக?

3. முன்னாளைய புலவர்கள் வடமொழி, தென்மொழியாகிய இரு மொழிகளையும் இருகண்ணாகப் போற்றி வந்தார்கள். காரணம் வடமொழி பரதகண்டத்திற்குறிய தென்றும், தென்மொழி பதன் நாட்டிற்குறிய மொழியென்றும் இருந்துவந்ததால். ஆனால், இந்நாளில் வடமொழி பிராமணர் மொழியென்றும், தென்மொழி மற்றவர் மொழி என்றும் கூறுவது எங்ஙனம் பொருந்தும?

1. எல்லாத் துறைகளிலும் ஆரியர் திராவிடர் கலப்பு ஏறபட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் கலப்பு விசித்திரமானது: பண்பாடு முழுவதும் எங்கும் திராவிடப் பண்பாடே. அதில் ஆரிய நஞ்சுமட்டுந்தான் கலந்து இருக்கிறது. தவிர பண்பாட்டின உரிமையும இன்று முழுவதும் உண்மைக்கும் ஆராய்ச்சிக்கும் மாறாக அரசியல் சமுதாய ஆதிக்கம் காரணமாக ஆரியருடையதாகவும் ஆரிய மொழி சார்பானதாகவும் கருதப்படுகிறது.

2. யார் எந்நாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்தாலும் இந்நாட்டின் பண்பாடு முற்றிலும இந்நாட்டினுடையதே. அது திராவிடப் பண்பாடுதான். அது குன்றிய இடமே வடநாடு. அங்கும் ஆரியர் முதலிய அயலவர் பண்பாடு கெடுத்தனரேயன்றி வளர்க்க எதுவும செய்யவில்லை. பிராமணரை நாம் ஆரியர் என்பதும், வடநாட்டை ஆரிய நாடு என்பதும் பிறப்புக் காரணமாக அல்ல, இரு சாரினரும் தமிழ், தமிழ் பண்பாட்டை அழிப்பதற்கே தங்கள் மொழியுரிமையையும் ஒரு நாட்டுக் கொள்கையையும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது காணலாம்.

3. வடமொழி, தென்மொழி என்ற பேச்சும, இரு மொழியும் இரு கண்கள் என்ற கருத்தும சங்க காலத்தில் கிடையாது, ஏனென்றால் அன்று கீழை உலகில் இருந்த போட்டியற்ற ஒரே இலக்கிய மொழி தமிழ்தான். தமிழோடு வடமொழி

(8-ம் பக்கம் பார்க்க)

நூல் நிலையங்களுக்கான
மாணவர் வெளியீடுகள்

பேரலி இளவரசன்	0-8-0
பொல்லாத தமிழன்	(அச்சில்)
விஜயசீலன்	"
மந்திரக்கல்	"
மூன்று சகோதரிகள்	"
அசடு வழிந்தது	"

மற்றும். தமிழ்வாணன், அழ. வள்ளியப்பா, பூவண்ணன், ஆகியோரின் மாணவர் வெளியீடுகள் அனைத்தும் கிடைக்கும்.

மாணவர் இல்லம்,
135, மவுண்ட் ரோடு, சென்னை - 6.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-1.